சிவமயம்

குமரகுருபரன்



மலர் 16]　1965ஆம் கார்த்திகை 1-ம் உ (16-11-65)　[இதழ் 1

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்,
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள். தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி. புளியங்குடி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T.,
அசிஸ்ட்டண்டு கமிஷனர்.
H. R. & C. E. (Adm) Dept. Ramanad at Madura-2.
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

ஈ. விஜயலிங்கசுவாமி

உ

சிவ சிவ

சந்தா உயர்வு அறிவிப்பு

குமரகுருபரன் திங்கள் வெளியீடு 16 ஆண்டுகளாகச் சைவமும் தமிழும் பரப்பி வருவது உலகம் அறிந்ததொன்று. தாள் விலையேற்றம். அச்சுக்கூலி உயர்வு, முதலிய தவிர்க்க முடியாத காரணங்களால் விசுவாவசு ஆண்டு தைத்திங்கள் 1-ம் உ 17 வது ஆண்டு மலர் முதல் ஆண்டுச் சந்தா ரூ. 1-50 லிருந்து ரூ. **2-25 ஆக உயர்த்தப் பட்டுள்ளது; தனிப் பிரதி 0 - 19 பைசே.**

சந்தாதார்கள் இச்சிறு சந்தாவுயர்வை ஏற்றுத் தொடர்ந்து சந்தாவைச் செலுத்தி ஆதரிப்பார்களாக! செந்திலாண்டவன் திருவருள்.

டி. எம். குமரகுருபரன் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
நிர்வாக ஆசிரியர்.

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 16 || விசுவாவசுஞு கார்த்திகைத் திங்கள் 1ம்உ [16-11-65] || இதழ் 11

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 18)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

திருச்சிற்றம்பலம்

"துடிகொள்நே ரிடையாள் சுரிகுழன் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் றழலிற் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே."

என்னுந் திருவாசகத்திலே, சிவபெருமானது திருமார்பிலே சிவகாமி யம்மையாரது கொங்கைச் சுவடு தங்குஞ் செய்தி குறிக்கப்பட்டுளது. ஊரும் பேரும் உருவும் கருவும் இல்லாத கடவுள் உயிர்களின் உய்திக்காக அவற்றையுடையான் போல நடிக்கின்ற உண்மையை மறுப்பார் உணர்வுடையாரல்லர். உலகிய லொழுக்கம் எல்லாவற்றிற்கும் அருளியலிற் காரண மாக நிகழ்தல் ஒருதலை. கடவுள் யோகியாயும் போகியாயும் வேகியாயும் நின்ருலன்றி உயிர்கள் யோகமும் போகமும் எய்தா. பாவத்தின் ஒழிய மாட்டா. உயிர்களின் மாட்டு நிகழ் வன யாவும் கடவுளின் மாட்டு நிகழ்தற் காரணத்தால்தான் உளவாகின்றன. உணர்வுருவாய சிவகாமி யம்மைக்கும் இன்புரு வாகிய திருக்கூத்தப் பிரானுக்கும் நிகழ்வனவாக இலக்கியங் களிற் சொல்லப்படும் உலகியல் ஒழுக்கம் எல்லாம் உண்மை யேதுக்களாகும். அவ்வேதுக்களே உயிர்களின் இன்பத்திற்கு இன்றியமையாதவை. அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம் என்ற சிவாகம வசனம் இங்கு நினைக்கத் தக்கது.

இவ்விரட்டை மணிமாலைப் பாடலில் "மூன்றுதழும்பு" சொல்லப் பட்டுள்ளன. முதலது மதித்தழும்பு, இரண்டாவது வளைத்தழும்பு. மூன்ருவது கொங்கைத் தழும்பு. இப்பாடலொடு இதன் முன் பின் உள்ள 12, 14, 19-ஆம் பாடல்களை வைத்து நோக்கு மின்கள். அவற்றுள் வரும் 'வெண்மதியும் தேய்ந்தது' 'நின் பங்காளர் நின்னைப் பணியுமப்போது' 'பிள்ளைப் பிறைநாறுஞ் சிறடி' என்னும் பகுதிகள் இதன் பொருளோடு ஒத்து நிற்பன.

தில்லைப்பிரான் தில்லைப் பிராட்டியின் ஊடலைத் தணிப்பான் பணிந்தான். அப்பொழுது அவன் தலைப்பிறை அவள் காலிற் சுவடுண்டாக்கிற்று. அச்சுவட்டிற்கு ஈடாக, அப்பிறை போன்று வளைவுடைய வளையலால், அப்பிராட்டி அப்பிரான் (முதுகிலும்) தோளிலும் உண்டாக்கிவிட்டாள். அதனுல் மதித் தழும்புக்கு வளைத்தழும்பு சரியாய்விட்டது.

"பொன்னம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
மின்னுஞ் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்கள்
அந்நங்கை செங்கைக் கணிவளையும் ஒக்குமால்"

எனவருஞ் சிதம்பரச் செய்யுட்கோவைப் பாடலில், பிறைக்கு வளையொக்குமாறு கூறிய தறிக. இதன் குறிப்புரையிலே,

"வளையுடைத் தனையதாகிப் பலர் தொழச்
செவ்வாய் வானத்து ஐயனத் தோன்றி
இன்னம் பிறந்தன்று பிறையே"

என்ற குறுந்தொகைப் பாடற் பகுதியும்,

"புலவியில் உடைந்த சங்கம் புரிசடைத் திங்கட் கீற்றின்
மலைவற இணைக்கும் ஏல்வை"

என்ற கூர்ம புராணப் பாட்டின் பகுதியும்,

"ஊடலின் உடைந்த சங்கம் ஒளிர்சடைப் பிறைவெண் கீற்றின்
மாடுறப் பொருத்தும் போழ்து மகிழ்நருட் குறித்து நோக்க
ஏடுறுதளவப் போதின் இளநிலா முறுவல் பூத்துப்
பீடுறுமதியிற் செய்த பெண்ணடி வணக்கஞ் செய்வாம்"

என்ற திருச்செந்தூர்ப் புராணப் பாட்டும், பிரபந்தத் திரட்டில் தமிழ்த் தெய்வம் காட்டிய வொப்புமைப் பகுதியாகும். அத் தெய்வத்தின் தமிழ்த் தொண்டுக்கு ஒப்பேயில்லை. உயர்வும் ஒன்று உளதாமோ? ஆராய்ச்சியாளர் எல்லாரும் அத்தெய் வத்தின் ஆராய்ச்சிப் பதிப்புக்களாங் கடைக்கால் வைத்தே ஆராய்ச்சிக் கட்டடம் எழுப்பலாயினர்.

காஞ்சிப் புராணத்தில் உள்ள தழுவக் குழைந்த படலத் திலே, காமாட்சியம்மையார் ஏகம்பநாதரைத் தழுவியதால், கொங்கைத் தழும்பும் வளைத்தழும்பும் உற்ற செய்தியைப் பல இடத்தில் பல முறை பலர் படித்திருப்பர். குமரகுருபர முனி வரரும் அவ்வரலாற்றைப் பல இடத்திற் பலபடியாகப் பாடி யருளினர். யாமும் முன்னர்ப் பல பாக்களின் விளக்கங்களிற் சுருக்கியும் விரித்தும் எழுதினேம். அதனால் இதிற் சுருங்கவும் கூறிலேம்.

"தாளிற் பதித்த மதித்தழும் புக்குச் சரியெம்பிரான்
தோளிற் பதித்த வளைத்தழும் பேதொல்லைத் தில்லைப்பிரான்
வாளிற் பதித்த முலைத்தழும் பங்கவர் மார்பினிலந்
நாளிற் பதித்ததொன் றேயெம் பிராட்டி நடுவின்மையே,

இக்கட்டளைக் கலித்துறையிற் குறித்தது யாது? இறைவன் செய்த ஒன்றற்கு இறைவியும் ஒன்று செய்து ஈடாக்கிவிட்டாள். மீண்டும் இறைவன் யாதுஞ் செய்திலன். அவன் செய்யாதிருந்தும் இறைவி செய்தது நடுவாகாது. அவள்பால் நடுவின்மை யாதலை அவள் செய்கையே நாட்டியது. அவன் மார்பில் இறைவி செய்த கொங்கைத் தழும்பு மிகையே என்றவாறு. நடு – நடுநிலைமைக்கும் உடலின் நடுவாகிய உறுப்புக்கும் உரியதாய் நின்ற இருபொருட் சொல். இன்மை – இல்லாமை. நடுவிருப்பின் கொங்கைத் தழும்பு உண்டாயிராது. அத்தழும்பிற்கு ஹேது நடு (– இடை, நடுவுநிலை) இல்லாமையே. இடையின்மை தொனியாற் கிடைப்பதாகும். சேனாவரையர் கருத்துப்படி இருபொருட்கும் இருமுறை ஒலித்துக் கொள்ளற்பாலது அத்தொடர்.

(தொடரும்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 10-ன் தொடர்ச்சி

The Four Baptisms in Ritual worship
கிரியை நெறியில் நான்கு தீட்சைகள்

90. சமயம் கிரியையில் தன்மனம் கோயில்;
சமய மனுமுறை தானே விசேடம்;
சமயத்து மூலந்தனைத் தேறல் மூன்றும்;
சமயாபி டேகந் தானும் சமாதியே.

In ritual worship are baptisms four:
Samaya baptism prepareth the heart as for a temple of God;
Visesha sacrament installeth the Faith firm;
Nirvana is to help realize the basic spiritual Truth of Faith;
Abhisheka Confereth the state **Samadhi** supreme.

[Compare the Infant Baptism, the Sacrament, the baptismus plamis (Spiritual baptism) and the Anointment or priestly ordination of the Christian Church.]

கிரியை நெறியில், சமய தீட்சை பெறுவோர், தமது உள்ளத்தை இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயிலாக்கிக் கொள்ளும் வாய்ப்பினைப் பெறுகின்றனர், விசேட தீட்சை பெறுவோர்

சமய சம்பந்தமான உணர்வில் உள்ளம் பதிக்கப்பெறுகின்றனர். மூன்ருவதான நிர்வாண தீட்சை பெறுவோர் சமய உணர்வுக்கு முதற் காரணமாக இருக்கும் ஆன்மீக உண்மையை அறியப் பெறுகின்றனர். அபிடேக தீட்சை பெறுவோர் சமாதி நிலையை அடைய வல்லவராகின்றனர்.

குறிப்பு:

வரி: 1. *சமயம் - சமய தீட்சை*
2, 3. *சமயம் - சிவநெறி*

Transformation of Pasa (World-Knowledge) Gnana in the four stages of Attainment

நான்கு முத்தி நிலைகளிலும் பாசம் அடையும் நிலை

91. பாசம் பசுவானதாகும் இச்சாலோகம்
பாசம் அருளானதாகும் இச்சாமீபம்
பாசம் சிரமானதாகும் இச்சாருபம்
பாசம் கரைபதி சாயுச்சியமே.

In Saloka, Pasa Gnana (world knowledge)
becometh Pasu Gnana (Spritural knowledge)
In Samipa, it becometh Arul Gnana (Grace-knowledge)
In Sarupa, it is transformed into Pathi Gnana (God-knowledge)
In Sayujya, it is for ever dissolved.

சாலோக நிலையில், பாச ஞானம் பசுஞானமாகின்றது; சாமீபத்தில் அருள்ஞானமாகின்றது; சாருபத்தில் தலையாய பதிஞானமாகின்றது. சாயுச்சியத்தில் கரைகின்றது.

குறிப்பு:

வரி: 1. பாசம் - பாசஞானம் - லௌகிக ஞானம்
பசு - பசுஞானம் - ஆன்ம ஞானம்
வரி: 2. அருள் - அருள் ஞானம் - திருவடி ஞானம்
வரி: 3. சிரம் - பதிஞானத்தைக் குறித்தது - அத்வைத ஞானம்,

Only Gnana-in-yoga leadeth to Sarupa state

சாருபநிலை யோகத்தில்-ஞானம் என்ற படியிலேயே எய்தும்

92. தங்கிய சாருபம்தான் எட்டாம் யோகமாம்;
தங்கும் சன்மார்க்கந்தனில் அன்றிக்கை கூடா;
அங்கத்து உடல்சித்தி சாதனர் ஆகுவர்;
இங்கிவராக, இழிவற்ற யோகமே.

The State of Sarupa is, no doubt, reached
Through the eight-pronged yoga way;
But unless it be Sanmarga-in-yoga attained,
The Sarupa state cannot be;
The yoga way but leadeth to bodily siddhis diverse;
But for the Sarupa state to realize,
None but the pure way of Gnana-in-yoga.

Note: Sanmarga-in-yoga is identical with Gnana-in-yoga.

அட்டாங்க யோக நெறியில் சாருபம் சித்திப்பதென்ருலும், யோகத்தில்-ஞானம் என்ற நிலையிலன்றி, அது கை கூடாதாம். ஏனைய யோக நிலைகளால் எல்லாம் உடற்சித்தி சாதனங்களையே பெறலாகும். ஆனுல், சாருப நிலையைப் பெற தூயயோகமாம் யோகத்தில் ஞானமே துணை.

குறிப்பு:

யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் என்ற நான்கன் பிரிவினுள், யோகத்தில் ஞானத் தாலேயே சாருபம் எய்தலாகும்.

(தொடரும்)

திருத்தமிழ்

வித்துத்தமிழ் நத்தித்தகம்புக
பித்தித்தவர் மெத்தச்சுகநகை
சொத்துச்சுகம் பத்துத்தொகைசெகத் துறவாக

முத்தைத்தரு முந்தித்துறக்கமும்
சித்தித்துற நித்தத்துறவுற
வித்தைத்தரு வித்தைப்பெருநிறை மறையாக

அத்தப்பொருள் இத்தித்தருவுரு
அத்தர்க்கிறை உத்தித்தருநிறை
சித்தப்பெரு முத்தர்க்குறுநெறித் திருவாக

சித்தப்பெரு புத்திப்பெருக்குற
சுத்தத்தரு புத்தத்துருபெற
சத்தைத்தரு சித்தைநிறைபகுத் தறிவாக

சுத்தித்திரி நத்தைநரிவகை
கொத்துச்சுரி குத்துக்கணைத்தொகை
மெத்தத்தரை நத்தப்புணைகணை விறலாக

புத்தப்புது வத்தக்கதிர்க்குவை
முத்தர்முது சித்தத்தொளிரவை
மித்தைப்பகை பெத்தப்புலர்கவைத் திறமாக

சத்தச்சுவை சத்துச்சுகவகை
தித்தித்தது தித்தித்ததுவது
துத்தப்புது கொத்துக்குவைத்தொகை நெருக்காக

தத்தைப்பொழி துத்தத்திழையொலி
தித்தித்தெழு சத்துச்சுவையிதழ்
வித்தைவழி சித்தித்திசைமொழி தமிழாமே

கவிதைவேள் தமிழரசன்,

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 10-ன் தொடர்ச்சி)

தொடுக்குந் தொடைவெண் டுகிற்கொடிகள்
    தொடுநீர்ப் பரவை முகம்புழுங்கத்
தோன்றும் பருதி மணித்திண்டேர்
    தூண்டுங் கலின வாம்பரியை
முடுக்குஞ் சுடர்ப்பொற் றலத்திழைத்த
    முழுநீ லத்தி னெழுகொளியின்
முழுகுங் கடவுள் மால்யானை
    முகிலிற் றோன்ற வகலிடநின்
றடுக்குங் களிறென் றரமகளிர்
    ஐயுற் றிடத்தன் வெளிறுமுடம்
பளறு படிந்த தெனக்கங்கை
    யாற்றும் பசும்பொ னசும்புபுனல்
மடுக்குஞ் செல்வக் கந்தபுரி
    வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
    மணியே தாலோ தாலேலோ 23

தொடுக்கப்பட்ட மாலைகளையுடைய வெள்ளைத் துகில்களாலாகிய கொடிகள், சகரரால் தோண்டப்பெற்ற நீரையுடைய கடலினது முகம் புழுங்கும்படியாகத் தோன்றுகின்ற சூரியனது அழகிய வலிய தேரைச் செலுத்துகின்ற கடிவாளத்தை யுடைய தாவுகின்ற குதிரைகளை முடுக்கி ஓட்டுகின்ற ஒள்ளிய அழகிய மேல்மாடத்தில் இழைக்கப்பெற்றுள்ள பெரிய நீல ரத்தினத்தி லிருந்து வீசுகின்ற ஒளியிலே மூழ்கிய வானுலகத்திலே யுள்ள ஐராவதமாகிய பெரிய யானை, மேகத்தைப் போலக் கருமையாகத்

தோன்ற, அதனைப் பார்த்து அகன்ற நிலவுலகத்திலே தங்கி வாழுகின்ற யானையென்று தேவமாதர்கள் ஐயங்கொள்ளத், தனது வெண்மையான உடம்பிலே சேறு படிந்ததென்று கங்கை யாற்றினது பசும்பொன் அசும்புகின்ற நீரிலே மூழ்குகின்ற செல்வமிக்க கந்தபுரியின் வாழ்வே! தாலோ. தாலேலோ. மலைமக ளாகியபார்வதி தேவியின் மணி வயிறு வாய்த்த முழுமணியே! தாலோ. தாலேலோ.

தீற்றுஞ் சுதைவெண் ணிலவெறிப்பத்
திரண்மா மணிகள் வெயில்விரிக்கும்
செம்பொற் றலத்துப் பேரமர்க்கட்
சிறியார் நறிய வகிற்புகையிட்
டாற்றுங் குழற்காட் டினைப்புயலென்
றுட மயில்கண் டம்பவளத்
தரும்பு நகையைச் சகோரப்புள்
அருந்த விரிந்த முழுநகைவிண்
டேற்று நிலவுக் கிந்துசிலை
ஒளிர்மா ளிகையும் சூளிகையும்
உருகிப் பெருகுங் கலுழிவெள்ளம்
உவரோ டுவரிக் கடற்புலவு
மாற்றுங் கடவுட் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. 24

பூசப்பட்ட சுண்ணும்புக் குழம்பு வெண்ணிலவை வீசத், திரண்ட பெரிய இரத்தினங்கள் ஒளியை விரிக்கின்ற, செவ்விய, அழகிய மேல்மாடத்தில், பெரிய போர் செய்கின்ற கண்களையுடைய சிறு நங்கையர், மணமிக்க அகிற் புகையை இட்டு ஆற்றுகின்ற கூந்தற் கற்றையை மேகமென்று நினைத்து, மயில்கள் ஆடவும், அவர்களது அழகிய பவளம்போன்ற வாயிலேயுள்ள பற்களின் ஒளியைக் கண்டு அதனை நிலவொளி யென்று நினைத்துச் சகோரப்புள் அருந்தவும், விரிந்த அவர் களது முழுநகையில் உண்டாகிய நிலவினுல் சந்திர காந்தக் கல் பதிக்கப் பெற்ற மாளிகைகளும், மேல்மாடங்களும் உருகிப் பெருகிய பெருவெள்ளம் சென்று, உவர்க் கடலிலே யுள்ள உவரையும், புலவு நாற்றத்தையும் மாற்றுகின்ற கடவுட்

டன்மையுள்ள கந்தபுரியின் வாழ்வே! தாலோ தாலேலோ. மலை மகளாகிய பார்வதி தேவியின் மணி வயிறு வாய்த்த முழு மணியே! தாலோ தாலேலோ.

கிளைக்கும் சகரர் தொட்டபெருங்
கிடங்கென் றிடங்கர் மாவியங்கும்
கீழ்நீ ரழுவக் குண்டகழிக்
கெழுமு புனற்றெண் டிரைமேய்ந்து
திளைக்குங் கமஞ்சூ னெடும்புயலைச்
சிறுகட் பெருங்கைப் பகடென்றேர்
செங்கட் களிறு பிளிறநிமிர்
திகிரி கிரியென் றிவர்ந்துடலம்
இளைக்கும் படிவிண் டொடநிவந்த
எழிற்பொற் புரிசை விண்டுபதத்
தேறு மேணி பொற்றருவுக்
கிடுவே லியுமா யேழுலகும்
வளைக்குங் கடவுட் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. 25

உறவுகொண்டு தோன்றிய சகரர்கள் தோண்டிய பெரிய கடலென்று நினைத்து, முதலையாகிய விலங்கு சென்று வாழு கின்ற ஊற்று நீரையுடைய பரந்த பெரிய அகழியிலே நிறைந் துள்ள நீரினது தெள்ளிய திரையை மேய்ந்து மகிழுகின்ற நிறைகருக்கொண்ட நீண்ட மேகத்தைச், சிறிய கண்களையும் பெரிய கையையுமுடைய யானை யென்று நினைத்து, ஒரு சிவந்த கண்களையுடைய ஆண்யானை பிளிற, உயர்ந்த சக்கர வாள மலை யென்று மேகங்கள் மேலேறி உடலிளைக்கும்படி வானத்தைத் தொட்டு உயர்ந்த அழகிய மாளிகைகள், வானத் தில் ஏறுவதற்கு வைத்த ஏணிகள் போலவும், வானுலகத்துக் கற்பகம் முதலிய மரங்களுக்கிட்ட வேலிபோலவும் ஏழு உலகங் களையும் வளைக்கின்ற கடவுட்டன்மை யுடைய கந்தபுரியின் வாழ்வே! தாலோ தாலேலோ. மலைமகளாகிய பார்வதி தேவியின் மணி வயிறு வாய்த்த முழுமணியே! தாலோ. தாலேலோ.

(தொடரும்)

தேவிகாலோத்தரம் - சர்வஞானேத்தரம்

ஆசிரியர், திரு. மு. அருணசலம் அவர்கள்
திருச்சிற்றம்பலம்.

மலர் 16 இதழ் 10 பக்கம் 531-ன் தொடர்ச்சி

சர்வஞானேத்தரம்

மூந்தியதையொப்ப இதுவும் ஒரு சிறப்பான சைவசித்தாந்த நூல். வடமொழியில் "சர்வஞானேத்தர ஆகமம் — வித்தியா பாதம்" என்ற பெயரோடு 7 பிரகரணங்களையும் 240 சுலோகங்களையும் உடையது. "எல்லா ஆகமங்களிலும் இது சிறந்ததென்பது தோன்ற 'சர்வ ஞானேத்தரம்' எனப் பெயருமிட்டருளிச் செய்த சிகண்டவுருத்திரனர்" என்பது சிவஞான சுவாமிகள் உரைக் குறிப்பு. வாயு சம்ஹிதையில் சர்வாகமம் என இது கூறப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. மெய்கண்ட சந்தானத்துக்குச் சிவஞானபோதம் போல, வாமதேவ சந்தானத்திற்குச் சர்வஞானேத்தரம் மூலசாத்திரம். ஸ்ரீகண்ட பரமசிவனிடத்தில் உபதேசம் பெற்ற ஸ்கந்தமூர்த்தி வாமதேவ மகரிஷிக்கு உபதேசிக்க, அவர்தாம் பெற்ற பிரணவார்த்தத்தையும் சர்வ ஞானேத்தரமென்னும் ஆகமத்தையும் நீலகண்ட சிவாசாரியருக்கு உபதேசிக்க இந்த முறையே வந்தது, சூரியனர் கோவில் ஆதீனம் சர்வஞானேத்தரத்துக்குத் தமிழில் சிவாக்கிர யோகி உரை செய்தார்; அது இன்று கிடைப்பதாகத் தெரியவில்லை.

சர்வ ஞானேத்தரத்தின் சிறப்பை மற்றொரு வகையிலும் நாம் உணர்தல் கூடும். சிவஞான சுவாமிகள், சிவாக்கிர போகிகள் செய்த வடமொழிச் சிவஞான போத பாஷ்யத்தை நன்கு ஆராய்ந்து தம் தமிழ்ச் சிவஞான பாடியத்தைச் செய்தார் என்பது வரலாறு. இச்சிவஞான பாடியத்துள் ஆறும் சூத்திர வுரையில், சர்வஞானேத்தர ஆகமத்தின் கருத்து முழுமையும் அவர் தொகுத்து உரைத்திருக்கிருர்.

"அத்துவிதப் பாவனையுடையோன் ஞானக் கண்ணுல் சிவனை ஆன்மாவிற் கண்டு, முழுவதும் வியாபகமாய் நின்று அறிவதாகிய முற்றுணர்வுடையனுய், அவ்வப் பொருளியல் பெல்லாம் அறிந்து மலவாசனை நீங்கிக் கேவலமாய் நின்று முடிவு காண்கில்லாப் பேரின்பத்தைப் பெறுவன் என முடிந்தது முடித்துக் காட்டி இங்ஙனம் சீகண்டவுருத்திர நாயனுர் ஆறுமுகக் கடவுளுக்குச் சர்வ ஞானேத்தரத்தின் ஞானபாதம் செவியறிவுறுத்தருளினுர்" என்ற பகுதியைக் காண்க.

இதுகாறும் கூறியவற்ருல் இந்நூல் சிறந்த சைவ சித்தாந்தப் பிரமாண நூல், என்பது தெளிவாகும். இவ்வாகமத்தை முருகப் பெருமானுக்குச் சிவபெருமான் உபதேசித்தார் என்பது வரலாறு.

இதன் தமிழ் மொழிபெயர்ப்பு பழமையான நூல். 9 பிரகரணங்களையும், 71 விருத்தங்களையும்[1] கொண்டது. இதன் காப்புச் செய்யுள், தேவிகாலோத்தரக் காப்புச் செய்யுளாகிய மதுரைச் சித்தி விநாயகன் வணக்கப் பாடலாகவே காணப் படுகிறது. எனவே இரண்டையும் ஒருவரே செய்தார் என்றும், ஒரு காப்புச் செய்யுளையே இரண்டுக்கும் கொண்டார் என்றும் கருத இடம் தருகிறது. (தேவிகால உத்தரம், சர்வ ஞான உத்தரம் என்ற இரு சாத்திரங்களும் ஒரே நூலின் இரு பிரிவுகள் என்று கருதி, ஒரே ஆசிரியர் மொழிபெயர்த்து ஒரே காப்புச் செய்யுளை அமைத்துக் கொண்டார் போலும். சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம் என இரு பிரிவுகளாகச் செய்த ஆசிரியர் அருணந்தி சிவாசாரியர் இரண்டுக்கும், 'ஒரு கோட்டன் இருசெவியன்' என்ற ஒரே விநாயக வணக்கப் பாடலை அமைத்திருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.) தமிழில் இதை ஞானபாதம் என்று தமிழ் மொழிபெயர்ப்பும், சிவஞான சுவாமி

---

[1] ஓர் ஏட்டுப் பிரதியில் இந்நூலின் பாயிரமாகப் பல செய்யுட்கள் உள்ளனவென்றும், அவை யாவும் எழுத்துக்களின் சொரூபம் தெரியா வண்ணம் சிதலால் சிதைக்கப்பட்டிருந்தனவாதலின் அப்பாயிரங்களை அச்சிடமுடியவில்லை என்றும் முத்தையா பிள்ளை தம் பதிப்பில் குறிப்பிட்டிருக்கிருர். ஏடுகள் இருப்பின் இப்பாயிரப் பகுதி கிடைத்து இங்குக் கூறியுள்ள கருத்து இன்னும் தெளிவு பெறக்கூடும்.

களும், கருதிய போதிலுங்கூட, வடமொழிச் சுலோகத்தில் வித்தியா பாதம் என்று பெயர் காணப்படுகிறது.

இதன் 68-ஆம் பாடல் பின்வருவது:

ஒரு வசனமாகவே முடிந்தபொருள் உரைத்தோம்
ஒன்றுகக் காண்பதுவே காட்சி இன்னும்
பெரு வசனமாகநீ பலபடக் கேட்டாலும்
பின்னும் நாம் நிகழ்த்துவதும் இந்தஉபதேசம்
தருவசன சமுதாயம் பலபொருளும் விளக்கும்
தடுமாறு தேகமாய்த் தானேதான் ஆகி
நிரு வசனமாய் ஞானமோனம் ஒன்றும்இன்றி
நில்லாத நிலையின்றி நின்ற நிலைநிலையே.

இவ்விருத்தத்தின் முதல் அடியின் பிற்பாதியாகிய 'ஒன்றுகக் காண்பதுவே காட்சி' என்ற பகுதி அதே தொடக்கமுடைய அவ்வையின் தனிப்பாடலை நினைவூட்டுகிறது. அதுவருமாறு:

ஒன்றுகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றுன்தன் வீரமே வீரமாம் — என்றும்தான்
சாவாமற் கற்பதே கல்வி தனைப்பிறர்
ஏவமெல் உண்பதே ஊண்.

ஞானக்குறள் பாடிய அவ்வையே இத்தனிப் பாடலையும் செய்தவர் என்பது பொதுவாய் வழங்கும் கருத்து. இவ் அவ்வையார் காலம் கி. பி. 1350 என்று வரையறை செய்யப் பெற்றுள்ளது. தமிழ்ச் சர்வஞானேத்தர முடையார் அவ்வைப் பாடலின் வரியை அப்படியே எடுத்தமைத்துக் கொண்டிருப்பது கண்கூடு. ஆகவே அவர் அவ்வைக்குப் பிற்பட்டவர் என்பதும் தெளிவு. சர்வஞானேத்தரத்துக்கும் தேவிகா–லோத்தரத்துக்கும் காப்புச் செய்யுள் ஒன்றுயிருத்தல் பற்றி, இரண்டு நூல்களையும் ஒருவரே செய்தார் என்ற கருத்துப் பொருந்துமானல், உத்தேசம் கி. பி. 1375–1400 ஆகிய காலமே இரண்டுக்குமுரிய காலம் எனவும் பொருந்தும்.

இந்நூலின் செய்யுட்களில் வட சொற்கள் மிக அதிகமாய்ப் பயின்றுள்ளன. மொழிபெயர்ப்பு என்ற காரணத்தாலும்,

பொருள் காரணத்தாலும் வடசொல் மிகுதி என நாம் கருதலாம். நடை, மெய்கண்ட சாத்திரங்கள் போல அத்துணைச் சிறப்பான ஓசை நயமுடைய நடையன்று. சொல்லாட்சிகள், இது ஒரு வேதாந்த நூலோ என்று ஐயுறுவதற்கு இடமாயிருத்தல் உண்மை.

............சுயம் பிரகாசமாய் எங்கும் நிறைவாய்தீ
தத்துவாதீத மாய்த்தனியறிதல் முத்தி
சர்வஞ்ஞானோத்தரம் சம்பூரணம் சமாப்தி

என்று கடைசித்திரு விருத்தமும், அதன் பின்னுள்ள

சருவ ஞானோத்தரத்தைச் சந்தமும் பார்த்தால்
வருமோ பிறவி மறித்திங்கு — அரிதான
பேரின்ப வெள்ளம் பெருகுமே பற்றெழுந்த
தீரருக்கீ தாமென்றே செப்பு.

என்ற வெண்பாவும் இங்குக் கருதத்தக்கன.

தமிழ்ச்சருவ ஞானோத்தர மூலம் 1909-ல் அச்சாயிற்று. பின்னர் ஒருவர் இதற்கு வேதாந்த பரமாக உரை எழுதி வெளியிட்டு, இந்நூலே மாயாவாத நூல் என்றமையால், பொ. முத்தையப் பிள்ளையவர்கள் சைவ சித்தாந்த பரமாக முக்தி ரத்ன விருத்தி என்ற பெயரோடு புதிய உரை யொன்று எழுதி 1923-இல் வெளியிட்டார்கள். பிரம்மானந்த சுவாமிகள் உரை 1933-ல் வெளிவந்தது. செய்யுளின் வரிசை பதிப்புகளில் வேறுபட்டுள்ளது.

இவற்றால் கூறியது, கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்ற தேவிகாலோத்தரம் சர்வஞானோத்தரம் இரண்டும் சிறப்பான சைவ சித்தாந்த நூல்களாவன என்பதே. ஆகமம் என்ற பெயருடைய இந்நூல்கள் வேதாந்தத்துக்குப் பொருந்துவன அல்ல.

உயிர்ச்சோறு ஊட்டும் பாவைகள்

திரு. இர. குழந்தைவேலு, அவர்கள் எம். ஏ.,
பூ. சா. கோ. கலைக்கல்லூரி. கோவை-14.

—<O>—

1

தமிழர் உயிரினுஞ் சிறந்த தமிழின் திருவெம்பாவையும் திருப்பாவையும் பெரிதும் புகழத்தக்கவை. அவை கடவுட்காதல் திறஞ்செறிந்த இலக்கியச் செல்வங்கள். புலமைத்திருவினர் இருவர் ஈந்த அரிய கொடையே அவை. திருவெம்பாவையின் படைப்புத் தாயாயினுர் மாணிக்கவாசகனுர் ஆவர். ஆண்டாள் தம் தமிழ்க்குழவி திருப்பாவை யாகும். இவ் விரட்டைப் பாவைகள் பிறப்பால் தமிழர்தம் பொதுவுடைமை என்று உள்ளம் உவக்கக்கொள்ளலாம்.

2

இருபது பாடல்கள் கொண்டது திருவெம்பாவை. திருப்பாவை கொண்டிலங்கும் பாடல்கள் முப்பது. திருவெம்பாவைக்கும் திருப்பாவைக்கும் இறைவனுரே தலைமகனுராவர். மாணிக்கவாசகனுர் ஆண்டாள் இருவரும் தலைவியராகத் தம்மை எண்ணிக் காதல் கூர்ந்த பெற்றியை, இத்தொடர்த்தொகைப் பாடல்களில் கற்கலாம். திருவெம்பாவையது இறைமனக்கலப்பில் மாணிக்கவாசகனுர்தம் ஆண்மனத்தைக் காணவியலாது.

மாணிக்கவாசகனுர் ஆண்பாலாராதலான், திருவெம்பாவையினும் திருப்பாவையின் கருத்தோட்டத்தில் பெண்ணுள்ளம் சிறப்பாக எழுந்து விளங்குதற்கு வாய்ப்பு உண்டு என்பது சிலர் கருத்தில் நிலவும் எண்ணம். அக்கருத்தால் தமிழ்வழிக்குச் சிறப்பில்லை என்பதனைத் தெளிதல்வேண்டும். மக்கள் உணர்ச்சிகளின் பொதுக்கூறுகளை ஈடுபாட்டுடன் வரம்பு கடவாமல் சிறப்பித்துப் பாடல்களை அமைத்தலே புலவர் தொழில். இதனை உணர்ந்தால், முரண்பட்ட எண்ணக் கலக்கத்திற்கு இடனிராது. இத்தகுதியினை எளிதில் உணர்ந்து மதித்தற்குச் சங்கத்து இலக்கியத் தொகையே நல்ல துணை.

3

கணவனுர் பிரிந்து நீடித்த கால நீட்டிப்பால் குறுந் தொகைத் தலைவி ஒருத்தி மிகுதியும் கலங்கினுள்.

“ ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிறு மிதித்த வொருபழம் போலக்
குழைய” (குறுங், 24)

அத் தலைவி துயருற்ற மனநிலையைப் புலப்படுத்தும் தொடர்கள் இவை. ஆற்றுக்கு அயல்கரையில் ஓர் அத்திமரம் வளமாக ஓங்கித் தழைத்திருந்தது. வெள்ளிய கிளைகள் பெருகிய மரம் அது. அம்மரத்தினின்று விழுந்தவற்றுள் ஒரு பழத்தைச் சுவைக்க நண்டுகள் மொய்த்தன. நண்டுகள் மிதித்த மிதிப்பால் அத்திப்பழம் குழைந்து சிதையலாயிற்று. அங்ஙனம், மிதி பட்ட பழம்போல நைந்து உள்ளங் குழைந்தாள் தலைவி. தலைவியது உயிரைத் துடிக்கச் செய்த பிரிவுத்துன்பத்தினைப் புனைந்தவர் பரணர். ஆண்பாற் புலவர், தலைவியாக இருந்து தெளிந்த நெஞ்சப்பாங்கு இது.

அக் குறுந்தொகையில் காதலன் ஒருவனும் தன் உள்ளத்து வைத்த உயிர்க்காதலியை நாளும் காணவிழைந்தான். அவன் விருப்பம் நிறைவுருது குலைந்தது. ஆதலான், அவன் தன் காதலி நினைவு வந்து சோர்ந்தான்.

“பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
அரிதவா வுற்றனை நெஞ்சே ” (குறுங், 29)

அவாவிய நெஞ்சிற்குக் கூறிக் கவலையுற்று அவன் உருகியது இதனுற் பெறுதல் எளிது. நீரற்ற பசுமட்கலத்துள் மழைநீர் நிறைந்தது. அப் பசுங்கலம் நீரால் ஊறி, அந்நீரைத் தாங்கு தலில் வலிமை குன்றியது. ஆற்றல் தேய்ந்த பசுங்கலம்போலப் பொறுத்தற்கியலாமையால் அவனது நெஞ்சம் காதல்வெள்ளத் துள் மூழ்கி நனைந்தது; பெறுதற்கரிய ஒன்றில் விருப்புற்று ஊன்றி நின்ற அந் நெஞ்சம் தன் வலிமையில் தளர்ந்தது. இவ் வுள்ளவோட்டத்தைப் பாட்டில் அமைத்தவர் ஔவையார்.

பெண்பாற் புலவர் தலைவனாக இருந்து ஆண்மனத்தைப் பாடிய திறம் இது. ஆண் பெண் ஆகிய இருபாலார் தம் உள்ளோட்டக் காதற்கூறுகளைக் குறுந்தொகைப் பாடல்கள் வாயிலாக இரு பாலார் உணர்த்தினர். இந் நெறியில் ஏற்றத் தாழ்வு கிளைத்தல் அருமையே என்பது பரணர் ஒளவைப் புலமையில் புலனாகின்றது.

4

மேற்காட்டிய காதற் பாட்டுத் தெளிவையும் நினைவிற் கொண்டு, மாணிக்கவாசகனார் ஆண்டாள் ஆகியோர் தாம் கடவுட்காதலியராக இருந்து தரும் கடவுளன்பின் நுணுக்கம் உணரவேண்டும். கடவுளன்பர்களைத் திருமணங்கொள்ளும் விருப்பினை மணமாகாப் பெண்கள்,

"எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க"

(திருவெம்பாவை, 19)

எனவும்,

"மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்"

(திருப்பாவை, 29)

எனவும் வேண்டுகோளாக உள்ளந்திறந்து வெளியிடுதலைப் பாவைப் பாடல்கள் வாயிலாக அறியலாம்.

ஈண்டுத் திருவெம்பாவை மகளார் வாய்மொழியொடு திருப் பாவைக் கன்னியர் நாட்ட உரையினை ஒப்புநோக்குதல் நலம். இருவேறு தொகுதியினர் விருப்பமும் ஒன்றே ஆயிற்று என்பது இந்நிலையில் வெளிப்படும் செய்தி. ஈரிடத்தும் தமிழ்ச்செல்வியர் தம் நெஞ்சத்தை விளக்கப் புகுந்த மாணிக்கவாசகனார் ஆண் டாள் ஆகிய இருவரும் ஒருவர்க்கு ஒருவர் இளைத்தாரிலர் என்பது அளந்தறிய இயலும் உண்மை.

5

இத் தனித்திறத்தால், உயிர்ச்சோறு ஊட்டி வளர்க்கும் அன்னையராய், இரட்டைப் பாவைகள், திருமுறையினையும் நாலாயிரத்தினையும் விழுமிய விருந்தாகத் தமிழ்நெஞ்சம் ஏற்றுத் துய்க்கும் போக்கை வளர்த்துச் சிறப்பவை எனல் பொருந்தும்.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

St. Sundaramurti stayed at Tiruvarur for a few days and then started on his pilgrimage. He turned towards chera country. He was passing through a street of Tiruppukkoliyur (now known as Avinasi) when he heard shouts of joy and laughter in a house and the opposite house was engulfed in mourning. He enquired about this and was told that two boys of these two houses went for a bath in the lake nearby and one was killed by a crocodile and his people were wailing as the other boy, who accompanied him was alive, was undergoing the sacred thread ceremony in the opposite house. The saint entered the house which was unfortunate and the parents of the ill-fated boy were happy to meet the saint. He was moved by this and finding his way to the lake where the boy was killed, reached there and appealed to the Almighty to give back the boy to his parents. The crocodile came to the bank and spat out the boy with full growth for the years he spent in its stomache. The parents were overwhelmed with joy and prostrated before the saint.

திருப்புக்கொளியூர் அவிநாசி: பண்: குறிஞ்சி

'எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே
உற்றாயென் றுன்னையே உள்குகின் றேனுணர்ந் துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி யூரவி நாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதி யேபரமேட்டியே'.

"How can I forget you, my Master, in all the seven births? Oh, Pasupati, Parameswara, the endless One, enshrined at Tiruppukkoliyur, I remember you all the time as you are the only benefactor of mine".

(To be continued)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — பத்தாம் கொத்து

இனி, பத்தாம் கொத்து தோத்திரம் செய்யவும், மன முருகவும், பேரின்பத்தைப் பெறவும், பாசத்தன்மை நீங்கவும், யானெனதென்பதறவும், இன்ப சுகம் கிடைக்கவும் அனுக்கிர கமே வரமென்று உணர்த்தும் சிவசத்தி யனுபூதி. எவ்விடத்தும் நிறைவான நாதன் திருப்புகழ் ஓதுவதான:-

மன்ன வெம்பிரான் வருக வென்னெனை மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை முழுதும் யாவையு மிறுதி யுற்றநாட்
பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப் பெய்க முற்கணன் பாயெ னுவினுற்
பன்ன எம்பிரான் வருக வென்னெனைப் பாவ நாசநின் சீர்கள் பாடவே.

(இ - ள்). நாதனே! அடியேன் பொருட்டு எழுந்தருள்க, சுவாமி!தேவரீரோ,விட்டுணு பிரமா இருவருடன் அணுபட்சத்தில் உருத்திரனுக நின்ற ஏகவத்துவே! எல்லாவற்றினுக்கும் முன் நின்றருளும் ;முதற்பொருளே! அடியேன் பொருட்டு எழுந் தருள்க! சர்வ சங்கார மகா ஊழிக்காலம் பின்னுமுள பொருளே! அடியேன் பொருட்டு இரப்பதானேன். எழுந்தருள்க! தேவரீர் திருவடியைப் பன்னருசீர் வாய் அதுவேயாக அடியேன் வினை தீரத் தோத்திரம் செய்யக் கண்ணே பரிந்திட எழுந்தருள்க'— என வேண்டியருளியதெனக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத் தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- டி நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 16, இதழ் 10-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPAR SWAMI)

62. திருக்கோயிலில்லாத திருவிலூருந்
திருவெண்ணீறணியாத திருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடுபலதளிகளில்லாவூரும்
விருப்போடுவெண்சங்கமூதாவூரும்
விதானமும் வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடு மலர்பறித்திட்டுண்ணாவூரும்
அவையெல்லாமூரல்லவடவிகாடே.

The dreadful fate in store for irreligious men that is of being slowly killed by sore sickness, then being born again to a joyless life that circles round once more to death in unending cycles of dreariness.

The 'letters five' in no. 63 refer to the five-syllabled phrase na-mah-Si-va-ya, whose praise is chanted in vv. 53-55.

62. The ill-starred town without a house of God,
Wherein white ash on no man's brow doth glow,
The town where pious praises are unsung,
Where are no wayside shrines men's faith to show,
Where none blow joyfully the conch-shell white,
Where spread no conopies, no flags appear,
Where none make flowery offerings ere they eat,
Call it no town, 'tis but a jungle drear.

'வீர சைவம்'

'வீர சைவம்' என்னும் சொல் பேச்சு வழக்கில் மக்கள் பல ராலும் பலகாலும் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் மக்கள் அதன் உண்மைச் சொற்பொருளையுணர்ந்து கொள்ளாமல், விபரீதமான முறையில் மிகவும் பிழையான திரிபுபட்ட பொருட் குறிப்பிலேயே வழங்கி வருதலைக் காண்கின்றோம். 'வீரம்' என்பதனை மக்கள் பலரும், முரட்டுத்தனம் பிடிவாதம் மூர்க்கத் தனம் என்பன போன்ற பொருட்களின் குறிப்பிலேயே, பெரிதும் தவறாக வழங்கி வருகின்றனர். 'வீரசைவம்' என்றால், அஃது ஏதோ பிற சமயங்களை வெறுக்கும் குறுகிய நோக்குடைய பிடிவாதச்சைவம் போலும் என்றே மக்கள் பலரும் பொதுவாகப் பிழைபடக் கருதுவதாகத் தெரிகின்றது.

'வீர சைவம்' என்பது கன்னட நாட்டில், கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒருவகை மறுமலர்ச்சி இயக்கச் சமயம் ஆகும். சிவவழிபாட்டிலும் நெறியிலும் மிகவும் ஈடுபாடு கொண்டு, உறுதியுடன் அசைவின்றி நின்ற சமயமே 'வீர சைவம்' என்னும் சிறப்புப் பெயர் பெறுவதாயிற்று.

வீரசைவ இயக்கத்தைத் தோற்றியருளியவர் ஸ்ரீ பசவர் என்னும் கன்னட நாட்டுச் சான்றோர் ஆவர். அவர் பிராம்மண குலத்தில் தோன்றியருளியவர். பம்பாய்க்கு அருகேயுள்ள கல்யாணி நகரில் ஆண்டு வந்த விச்சலன் (கி. பி. 1157–67) என்னும் அரசனின் தலைமை அமைச்சராக விளங்கியிருந்தவர். இவரைத் திருநந்திதேவர் அவதாரமாகப் பசவ புராணம் முதலிய வீர சைவ நூல்கள் கூறும்.

நமது தமிழ் நாட்டில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்றும் சமய குரவர்கள் நால்வராலும்,அவர்கள் வழியே

1965 அக்டோபர் மாத 'திருக்கோயில்' பத்திரிகையில் வெளிவந்துள்ள இக்கட்டுரை ஆசிரியர் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

தோன்றிய மெய்கண்டார், அருள்நந்தி சிவாசாரியர், மறை ஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியர் என்னும் சந்தானக் குரவர்கள் நால்வராலும் பரப்பி வளர்க்கப்பட்ட சிவவழிபாட்டுக் கொள்கையும் நெறியுமே 'சைவ சமயம்' 'சித்தாந்த சைவம்' 'சைவ சித்தாந்தம்' என்னும் பெயர்களால் தொன்றுதொட்டு வழங்கி நிலவி வருகின்றது.

ஆயினும் சிவ வழிபாட்டில் உறுதி சிவனடியார்க்குப் பணி புரிதலில் ஈடுபாடு முதலிய சில கொள்கை ஒப்புமைகள் காரண மாக கன்னட நாட்டில் தோன்றிய வீர சைவம், தமிழ் நாட்டி லும் அங்கங்கே தழுவிக் கொள்ளப் பட்டுப் பரவி நிலைபெற் றுள்ளது.

வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தி யார், கொலைமறுத்தல் என்னும் நூல்களை இயற்றியருளிய கோவைப் பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள், துறைமங்கலம் சிவப் பிரகாச சுவாமிகள், விருத்தாசலம் குமார தேவர் திருவண்ணாமலைக் குகை நமச்சிவாயர், குருநமச்சிவாயர், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள், மயிலம் சிவஞானபாலைய சுவாமிகள், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் முதலிய சான்றோர் பெருமக்கள் பலரும், வீர சைவ நெறியினைப் போற்றி ஒழுகியவர்களே ஆவர்! துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியருளிய பிரபுலிங்க லீலை, சித்தாந்த சிகாமணி முதலியன தமிழிலுள்ள சிறந்த வீர சைவ நூல்கள் ஆகும்.

வீர சைவர்கள், தம் குருவினால் முறைப்படி அளிக்கப் பெற்ற இலிங்கத்தினைத் தலை கழுத்து தோள் மார்பு என்னும் இடங்கள் ஒன்றில், எப்போதும் பிரிவற அணிந்து கொண்டிருப் பர். இலிங்கதாரணம் வீர சைவர்களுக்கு இன்றியமையாத ஒரு பெருஞ்சிறப்பு அடையாளம் ஆகும். வேதம், ஆகமம், உப நிடதம் புராணம் முதலிய பலவற்றாலும் வற்புறுத்தப்படுவது இலிங்கதாரணம் என்பது வீர சைவக் கொள்கை.

சதுமறை யுள்ளும், மிக்க சாத்திரங் களினும், ஈரொன்
பதுவித புராணத் துள்ளும் பகர்தரு காமி கம்தான்

முதல்வரும் ஆக மத்தும் மொழிந்திடப் பட்டிடும், சந்
ததமும் மெய்விடா இலிங்க தாரணம் விறற்சை வர்க்கே
— சித்தாந்த சிகாமணி

என வரும் செய்யுளால், இலிங்கதாரணம் செய்துகொள்ளுதல் வீரசைவத்திற்கு மிகவும் இன்றியமையாத சிறப்பியற் கொள்கை என்பது உணரலாம். அது பற்றியே வீரசைவர் களுக்கு 'இலிங்காயதர்' என்றும் பெயர் வழங்கும்.

வீரசைவர்கள் தம் உடலில் பிரிவற எப்பொழுதும் அணிந்து கொண்டு, பூசை புரிந்து வழிபட்டு வரும் இலிங்கத்தை 'இஷ்ட லிங்கம்' எனப் போற்றி வழங்குவர். அதற்குச் செய்யும் பூசை தரிசனம் மூர்த்தம் பிரசாதம் நிஷ்டை தியானம் ஆகியவற் றையே அவர்கள் பெரிதும் முதன்மையும் சிறப்புமாகக் கொள் வார்கள். தத்தமக்குரிய இஷ்டலிங்கத்தைத் தவிர, வேறு பரார்த்தம் என உள்ள பிற லிங்கங்கள் மாட்டும் அவர்கள் அத்துணை அன்பு செலுத்த மாட்டார்கள். கற்புடைய நங்கை ஒருத்தி, தனக்கென விரும்பி வரித்துக் கொண்ட கணவனைத் தவிர வேறு பிறர் எவரையும் மனத்தினுற் கருத மாட்டாளாதல் போல, தனக்குரிய இஷ்டலிங்கம் தவிர வேறு பிறிது எதிலும் அன்பு செலுத்தாத உறுதிப்பாடு உடைமையே 'வீரசைவம்' ஆகும்.

கணவன்பால் இன்பமுறும் கற்புடையார் வேருேர்
திணவன்பால் இன்பமுறச் சிந்தித்து—அணவுருள்;
ஆங்கதுபோல் இஷ்டலிங்கத் தாகும்அன்பு வேற்றுலிங்கத்
தோங்கவிடா தாங்கதும் வீரம். — அத்துவித வெண்பா

வீரசைவர்கள், தீக்கை செய்துகொண்டு தம்மைப் போல் இஷ்டலிங்க பூசை செய்து வரும் இயல்பினர் அல்லாத ஏனை யோர் பிறர், எத்தகைய சிறப்பும் அன்பும் உடையவர்களே யாயினும், அவர்களோடு ஒன்ருக இருந்து உண்ணுதல் முதலிய எந்தச் செயலையும் செய்ய ஒருப்படாத திடமான கொள்கை யுடையவர்கள் ஆவர்! இத்தகைய உறுதிப்பாட்டினுலும் அவர் களின் நெறிக்கு 'வீரசைவம்' எனப் பெயர் அமைவதாயிற்று.

இவ்விரதம் இல்லாதார் எவ்விரதர் ஆயிடினும்
அவ்வவரோ டொன்ருய் அருந்தல் முதல் எவ்வெவையும்

உள்ளத்தா லும்நினையா துற்றஇடம் சற்றகலாக்
கொள்கைத்தாம் கோலமும் விரம். — அத்துவித வெண்பா

இங்ஙனம் தமது உடலில் இலிங்கதாரணம் செய்து கொண்டு, தமது ஞானாசிரியர் உபதேசித்தருளிய முறைப்படியே இஷ்டலிங்க பூசை புரிதலில் மிகுந்த திடமும் உறுதியும் பூண்டு ஒழுகும் வீரம் உடைய சைவரே, வீர சைவர் எனப் படுவர்.

இதனைப் பின்வரும் சித்தாந்த சிகாமணிச் செய்யுள் தெளிவுற விளக்குதல் காணலாம்.

அத்தனை அகம் தரிக்க அசத்தன் ஆயினும் அதாஅன்று
சத்தனே எனினும் ஞான தற்பர லிங்க மேஎன்
புத்தியின் திட்பம் எய்திப் புறத்து இலிங்கம் தரிக்க
வித்தக நெரி யுணர்ந்தோர் வீர சைவர்கள் தாம் அன்றே

தம் பொருளாம் இலிங்கம் தன்னை வள்ளிதழ் அவிழ்ந்த
வம்பலர் கந்தம் ஆதி மருவுற முறையிற் கொண்டு
கம்பமில் மனத்தி னேடு கரபீடத் தினில்அர்ச் சிப்பர்
இம்பரின் என்றும் சுத்தர் எனப்படும் வீர சைவர்.

வீரசைவன்' என்னும் சொல்லுக்குத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாம் இயற்றிய, 'சித்தாந்த சிகாமணி' என்னும் நூலில் பின்வருமாறு பொருள் விளக்குகின்றார்கள்.

(1) அருமை மிகுந்த வேதாந்தச் செந்நெறியினால் விளைகின்ற ஞானமே வித்தை எனப்பெயர் பெறும். அவ்வித்தையில் அன்பு கொண்டு ஈடுபட்டு விரவி நிற்பவன் வீரன் என்னும் சிறப்பைப் பெறுவான்.

அரியவே தாந்தத்தின் ஆகும் ஞானமே
மருவரும் வித்தை என் றுரைப்பர்; மற்றதில்
விரவினேன் யாவன்? மற் றவனயன் வீரன் என்று
உரைதரு கிற்பர் மெய்யுணர்ந் துளோர்களே

(2) வி என்பது வித்தையைக் குறிக்கும். ர என்பது ரமித்தல் அல்லது மகிழ்தலை யுணர்த்தும். சைவம் என்பது சிவனை வழிபடும் நெறி. சிவனை வழிபடும் நெறியாகிய ஞான வித்தையில் ஆர்வம் கொண்டு ஈடுபட்டு மகிழ்பவன் எவனோ, அவனுக்கு வீரசைவன் என்று பெயர்.

சித்தம் ஆகும் சிவமயம் ஆகிய
வித்தை யூடு விசேடம தாகிய
எத்திஞல் இங்கு இரமிப்பன்; அன்னவன்
பொய்த்தி டாத புகழ் வீர சைவனே.

(3) சிவனும் சீவனும் ஆகிய இருவரும் ஒன்று படுதல் ஆகிய சிவசீவ ஐக்கியம் என்னும் வித்தையில் பிறப்பு இறப் புக்கள் கெடுமாறு, ஒன்றி மகிழ்ந்து ரமிப்பவன் எவனே அவன் வீரசைவன் ஆவான்.

தீது அகன்ற சிவசீவ ஐக்யமாம்
வீத ரும்பெரு வித்தையின் நன்குறச்
சாதம் இன்றி ரமிக்கும் அச் சைவன்மற்று
ஒதில் அன்னேன் உயர் வீரசைவனே

இனி இப்பொருள்களி லெல்லாம் வேருக, மிகவும் புகழ் வாய்ந்த தத்துவ நூற் பேராசிரியர் ஆகிய சுரேந்திர நாத்தாஸ் குப்தா என்பவர், ஒருபொருள் கூறுகின்றுர். அயலார் அல்லது பகைவர்களிடம் இருந்து தம்முடைய சமயத்தினைப் பாதுகாத்துக் கொள்ளுதலில் வீரத்திறன்மிக்கு விளங்கியவர்கள் ஆதலின், வீரசைவர்கள் என்று அழைக்கப் பட்டனர் எனக்கொள்ளுதல் பொருத்தம் எனக் குறிப்பிடுகின்றுர் அவர்!

நாட்டின் நலத்திற்காகவும் பாதுகாப்பிற்காகவும் அருஞ் செயல்கள் பல ஆற்றலும், உயிர் கொடுத்து உதவுதலும் ஒப்பு

---

(1) "The Siddanta-Sikhamani gives a fanciful interpretation of the word, 'Vira' as being composed of 'Vi' meaning knowledge of identity with Brahman, and 'ra as meaning someone who takes pleasure in such knowledge. But such an etymology accepting it to be correct would give the form 'Vira' and not 'Veera'. No explanation is given as to how 'Vi' standing for 'Vidya' would lengthen its vowel into 'Vee'...

I therefore venture to suggest that Veerasaivas were called Veeras or Heroes for their heroic attitude in an aggressive or defensive manner in support of their faith.

—Surendranath Dasgupta, A History of Indian Philosophy, Vol V., P. 44-45.

யர்வற்ற பெருமை யுடையனவாக உலகெங்கணும் மதிக்கப் பெறுகின்றன. அங்ஙனமே தங்கள் சமயநெறிக்குப் பிறராற் கேடு நேராமற் பேணிப் பாதுகாத்துக்கொள்ள முயலுதலும் சிறப்புக்குரியதேயாகும். நாட்டுப் பற்று மிக்குவிளங்கி அதன் கண் உறைப்பும் விழிப்பும் பெற்றொளிர்தல் இன்றியமையாத கடமையாதல் போலவே, தத்தம் சமய வுரிமைகளையும் பண்பாடு களையும் நெறிமுறை சிறிதும் பிறழாமற் போற்றிப் பாதுகாத்துக் கொள்ளும் கருத்தும் கடமை யுணர்வும் பெற்று வாழ்தலும் பெருமைக் குரியதாகும் என்பதில் ஐயமில்லை. கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் தம் கன்னட நாட்டில், சைவ சமயம் நலிவுற் றழிந் தொழியாமற் பொலிவுறச் செய்யும் பொருட்டு, அதன் கண் ஆழ்ந்த பற்றும் அளப்பரிய ஈடுபாடும் வாய்ந்து சிவலிங்க தாரணம் செய்து கொண்டு சிவவழி பாட்டில் உறைத்து நின்ற வர்களே, வீரசைவ நெறியினர் என்பது சாலவும் பொருந்து வதேயாகும். தாஸ்குப்தா அவர்களின் கருத்தை வலியுறுத்தும் முறையில் பின்வரும் சித்தாந்த சிகாமணிச் செய்யுள் அமைந் திருத்தலும் அறிந்து இன்புறுதற்குரியது.

யாண்டொரு தாவ ரத்திற்கு இடையூறு வரினும், பத்தர்க்கு
ஏண்தரு சிவவே டத்தோர்க்கு இடர்கள்வந் துறினும், நில்லாது
ஆண்டுஉயிர் விடுத்தே யேனும் அளிக்க! மெய்ப்பரன் பொருட்டு
மாண்டவன் சிவனோ டொன்றும் பதத்தினை மருவும் அன்றே!

முடிவுரை :

இதுகாறும் விளக்கியவற்றால், 'வீர சைவம்' என்பது ஏதோ பிற சமயங்களை வெறுக்கும் குறுகிய நோக்குடைய பிடிவாதச் சைவம் போலும் எனச் சாதாரண மக்கள் சிலர் கருதுவது தவறு என்பதும், கன்னட நாட்டில் தோன்றியருளிய பசவர் முதலிய சான்றோர்களால் வளர்க்கப்பெற்ற ஒரு சிறந்த பண்பாட்டு நெறியே அஃது என்பதும், தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள் பலர் அதனைத் தழுவிப் போற்றி வளர்த்து மகிழ்ந்துள்ளனர் என்பதும் பிறவும் தெளியப்படும்.

— ஆசிரியர்,

FRIENDSHIP WITHOUT PERSONAL CONTACT

Prof: E. S. VARADARAJA IYER.

There once lived in the District of Tanjore a pious Saiva Saint by name Appoothiyar. He heard of the miracle performed by Saint Appar alias Thirunavukkarasar who is one of the four Saiva Samayacharias and who when cast on the sea by the orders of the Pallava King Mahendra Varman, who was a jain by religious persuasion, reached ashore using as a float the very stone he was tied to as a punishment for having renounced the jain faith and espoused the Saiva religion. Saint Appoothi was wonder-struck and his ardent admiration for the miracle-doer led him to name whatever owned by him after the famous saint. He named even his sons Tirunavukkarasu, calling them by the serial numbers one, two and so on. Being of a highly charitable disposition he put up a water-shed in an important locality situated where four roads met in his village in order to supply water for thirsty way-farers and named the shed as Tirunavukkarasu Water-shed.

Now it so happened that Saint Appar who went about shrine after shrine singing Tevaram hymns on the places he visited, came to the native place of Appothiyar. On reaching the village he saw the name Tirunavukkarasu prominently displayed on the water-shed. He stood in surprise as that name was given to him by Lord Shiva himself for his divine hymns

and as there could be no second person bearing that name. He immediately asked the people nearby who that person was who put up the shed. They told him that it was the highly magnificent Saint Appoothiyar and that he could find in its vicinity many roads, groves and tanks laid nurtured and dug by him, adding that he went home just a while ago and that he could see him at his house if he proceeded without delay.

On hearing those words Saint Appar went to his residence and Appoothiyar received him with sincere love and devotion. Saint Appar asked him how it was he had inscribed some other name and not his own on the water-shed he had put up. Appoothi Adigal at once got wild and exclaimed how it was he was blissfully ignorant of that reputed saint for all time who reached ashore utilising a stone as a float and how it happened that though he was in the auspicious garb of a Saiva devotee he could put him such a strange querry and asked him who he was and what quarter of the globe he was coming from. Appar Adigal who realised his greatness replied in all humility that he was the same ignorant and insignificant creature who was reclaimed from a non-vedic faith by Siva after subjecting him to the terrible malady that goes by the name of Soolai.

Now what should have been the ecstasy of Appoothiyar on hearing these words and on beholding before his very eyes one who was the object of his imagination and whom he knew till then only by his achievement. He fell prostrate at his feet and when lifted by Saint Appar danced in joy and ran about helter-skelter like a frenzied impecunious person, who hit on a big treasure unexpectedly. He at once

introduced the saint to the members of his household received him with the reverence due to an Athithi, cleansed his feet sprinkling the water so washed on his head and body. He then thought of entertaining him and told his wife that they were indeed extremely fortunate to have such an illustrious Saiva devotee as their guest. His wife was highly pleased as she prepared the proverbial six fold dishes. Then they without the least delay asked their eldest son to fetch a plantain leaf to feed him. The highly dutiful son, quite pleased with the behest of his parents hurried to the garden to fetch one. While however, he cut a leaf, he was bitten by a Cobra. Even then, unmindful of what happened to him he ran post-haste even faster than the venom which spred through his frame with intent to hand over the leaf. On reaching home, he placed the plaintain leaf on his mother's hands and fell unconcious. The parents who beheld this sad plight and the blood gushing out from the affected part, concluded that he should have been bitten by a venomous reptile. Immediately without any mental stir and with remarkable composure they made everything ready to serve their guest. They concealed their offspring in a hut and resolved to feed him without revealing what took place. They then approached Appar, prostrated before him and entreated him to accept what they offered. The usual ceremonies prescribed for the reception of Athithis were scrupulously gone through. Seated on a wooden plank Saint Appar administered sacred Vibhuthi to the couple and their sons, the second and the third Tirunavukkarasu. The Saint thereon asked them what befell the first Tirunavukkarasu. They simply stated that he would not be available.

Now there arose a confusion in the mind of Saint Appar who straight asked him what actually happened. Reluctant as they were to state what transpired, they out of fear to utter an untruth especially in the presence of such an august personality as Appar, told him what took place. Appar Adigal appreciated their action and restored the deceased boy to life by chanting a hymn, and the boy rose up as if from slumber. Appar gave him vibhuti with his blessings. The parents after all felt sorry for the delay caused in entertaining their guest.

Tirunavukkarasar then agreed to partake of the sumptuous feast provided by the grateful couple. The ground was purified with sacred cow-dung, the lamp was lit, and the plaintainleaf was spread. Appar adigal ate the meal in the company of the couple and their children and took leave of them to proceed to other shrines after extoling the devoted service of Appoothiyar and his virtuous house-wife.

"திருக்காந்தீச்சுரம்"

தேவாரமணி, திரு. சட்டையப்பன் அவர்கள்.

நாட்டுக்குப் பெருமை தருவன திருக்கோயில்கள். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று கூறப் படும் மொழியிலிருந்து நாம் அறிந்து வருகின்ற அரிய உண்மை யானது யாதெனின், 'கோயில் இருக்க வேண்டுவது அவசிய மானது ஊருக்கு' என்பதேயாம். 'நால்வர் நன்னெறியானது திருக்கோயில் நெறி' என்று நம்பியவர்கள் 'திருக்கோயில் இல்லாத ஊரைத் திரு இல் ஊர்' என்பர். அதாவது அந்த ஊரை நன்மை இல்லாத ஊர் என்று கூறுவர்.

தலங்கள் தோறும் செல்ல வேண்டும்; பல புண்ணியத் தீர்த்தங்களில் மூழ்க வேண்டும்; தெளிந்த மனத்தோடு ஆங் காங்குறையும் மூர்த்தியை வழிபட வேண்டும். இப்படியெல் லாம் முறையோடு இருப்பவர்க்கு நல்ல 'குரு'வானவர் கிடைக்க வாய்ப்பானது ஏற்படும் என்பதாக நந்தமிழ் நூல் கூறும்.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்பது தாயுமானவரது வாக்கு.

பாடல் பெற்றத் தலங்கள் — பாடல் பெருத தலங்கள் என்று பல தலங்கள் உண்டு நமது நாட்டில். முனிவர்கள் பலர், தவம் கூடுதற் பொருட்டுப் பல தலங்களில் இருந்து சமாதியாகியிருக்கிருர்கள் என்பதையெல்லாம் சித்தர் நூலில் படிக்கின்ருேம். தலங்கள் தோறும் தேங்கியுள்ள அருட் சக்தியை இவ்வுலகவர் புரிந்து நல்வழிக் கொள்ளவேண்டு மென்பதற்காக நமது முன்னேர்கள் தல வழிபாட்டைச் சிறந்த

ஒரு சிவப்புண்ணியமாக வகுத்தார்கள். தலங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டால் எளிதில் திருவருள் சித்திக்கும் என்பது அந்நல்லோரது பெரும் நம்பிக்கை.

'ஈஸ்வரன்' என்று வழங்கும் வடசொல்லானது தமிழில் 'இறைவன்' என வழங்கும். ஈச்சுவரன் எனவும் அதுவரும். ஆகவே 'இறைவன்' உறையுமிடத்தை ஈஸ்வரம் என்றும், ஈச்சரம் என்றும் கொண்டு இன்று அது வழக்கத்தில் இருந்து வருகின்றது. 'நாடகமாடி நந்திகேச்சுரம்' எனத் துவங்கும் நாவரசப் பெருமானின் அடைவுத் திருத்தாண்டகப் பாடல் இறுதியிலே 'இறைவன் உறைசுரம் பலவும் இயம்புவோமே' என்று கூறுகின்றார். திருஞான சம்பந்தப் பெருமானும், சுந்தரரும், தாம் வணங்கிப் பாடிய சில தலங்களில் 'பல்லவனீச் சரம், கணபதீச்சரம், கேதீச்சரம், வர்த்தமானீச்சரம், நாகேச்சரம்' என்றெல்லாம் குறிப்பிடுகின்றனர். எல்லாம் 'ஈச்சரம், ஈச்சுரம்' என இருவகையாக ஆங்காங்கு ஏற்ற முறையில் திருமுறை களில் பாடம் ஓதப் பெறுகின்றன. 'இறைவன்உறை சுரம்பலவும் இயம்புவோமே' என்ற திருநாவுக்கரசப் பெருந்தகையின் அடை வுத் திருத்தாண்டகப் பாடலின் இறுதி அடியையே இங்கு முதலாகக் கொண்டு இந்தக் 'காந்திச்சுரத்தை' உங்களுக்கு அளிக்கின்றேன்.

தமிழ் முனிவனும் அகத்தியன் வாழும் பொதிய மலையிலே பிறந்து பயன் தரும் கிழ்த் திசையை நோக்கிப் பாய்ந்து தனிப் பெரும் வளம்பெருக்குவது தாமிரபரணி யென்னும் நல்லாறு. இனிய அந்நதியின் இருபுறமும் பரமன்உறை தலங்கள் பல, அவற்றில் நீர்வளம் நிலவளம் நிறைந்தது – தொழில்வளம் குடி வளம் தோய்ந்தது – மொழிவளம் சமய வளத்தினுல் முன்னேறி வாழ்வதானதொரு பெரும்பதியாம் 'திக்கெலாம் புகழுறுந் திருநெல்வேலி'. இந்த மாவட்டத்திலே திருக்குறுகூர் என்னும் ஆழ்வார்திருநகரி ஓர் வைணவத் தலம். நம்மாழ்வாரால் மங்களாசாசனம் பெற்ற இப்பதியில் ஆதிநாதப் பெருமாள்! ஆதிகேசவன், பொலிந்து நின்றபிரான்; ஆதிநாதவல்லி, மலராள், ஆகியவர்களை வணங்கி வழிபடுகின்றனர் பக்தர்கள். சீர்அலைவாய் என்னும் திருச்செந்தூர் செல்லுபவர்கள் இடையில்

உள்ளதான இத்தலத்தை வழிபடத் தவறமாட்டார்கள். திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் போகும் கிளைப்புகைவண்டிப் பாதையிலே ஆழ்வார்திருநகரி என்ற புகைவண்டி நிலையம் இருக்கிறது. இதில் இறங்கினுல் அரைக்கற்றெலைவில் இந்த வைணவக் கோயிலையடையலாம். பஸ் மார்க்கமாக வந்தால் ஆலயத்துக்கு முன் பக்கம் செல்லுகின்றதான இடத்தில் இறங்கி விடலாம்.

இந்த வைணவக் கோயிலுக்கு நேர் வடக்கே ஒரு பர்லாங்கு தொலைவிலே தாமிரபரணி ஆற்றின் வட கரையில் இருப்பது தான் நாம் காணப்போகும் காந்தீச்சுரம்.

‘புண்ணியநதி எனவழங்கும் பொருநை யாற்றின் வடகரையில்
மண்ணுலகும் விண்ணுலகும் போற்றுந் தலம் காந்தீஸ்புரம்’

என்பது காந்திசுவரம் தலம்பற்றிய பாடலிலுள்ள வரிகளாகும். இத்தலத்து இறைவன் திருநாமம் ‘ஏகாந்தலிங்க சுவாமி.’ அம்மையின் பெயர் ‘அறம் வளர்த்த நாயகி’ என்பதாகும். தீர்த்தம் ‘காந்தை தீர்த்தம்’ என்ற ‘தரும தீர்த்தம்’; தைப்பூச நாளில் சுவாமி தீர்த்தம் கொடுத்தருளும் பூசை மண்டபத் துறை முன்னதாக உள்ள நதித்துறை இது.

மனதைக் கவரும் சோலைகள் நிறைந்த இடத்தில் பெரிய மதிற் சுவர்களையுடைய அரண்போல் காட்சி யளிக்கும் காந்தீச்சுரத்தை நடுநாயகமாக்குகின்றன பின்வருகின்ற தலங்கள்:

தெற்கே ஆதிநாதர் உறைகின்ற ஆழ்வார்திருநகரி.

மேற்கே மூன்ருவது கல்லில் ஸ்ரீவைகுண்டம்; இது கைலாசபுரம் எனவும் வழங்கும். கைலாசபுரத்து சிவன் கோயிலில் ‘கயிலாசநாதர், சிவகாமியம்மையும்’ இருந்து பரத்துவாசரிஷி, பிருது சக்ரவர்த்தி முதலியோர் வழிபாட்டை ஏற்று கயிலையை வரவழைத்து அவர்கட்கு காட்டியருளிய தலமாகும்; வளர் காசி வாழும் குமரகுருபர முனிவர் திருத்தோற்றம் செய்தருளியதலம். ஸ்ரீவைகுண்டம் வைணவக் கோயிலில் ‘வைகுந்தநாதன்-கள்ளர் பிரான், மாமலராள்-வைகுந்த மங்கை’ இருந்து அருள் வழங்குகின்றனர். இது நம்மாழ்வாரால் மங்களாசாசனம் பெற்றது.

வடக்கே மூன்ருவது கல்லில் நத்தம் விசயாசனப் பெருமாள் கோயில். நத்தம் என்னும் இத்தலம் 'திருவரகுண மங்கை' என்பதாகும். விசயாசனப் பெருமாள் உடன் உறை அம்மையின் பெயர், வரகுண மங்கை என்றிருப்பதால் அதை அறியலாம். அடுத்து ஒரு தலமாம் 'புளியங்குடி;' இங்கு வேதசார விமானத் திலே 'காசினிவேந்தப் பெருமான் கிழக்குமுகமாக புஜங்க சயனராகக் காட்சியளிக்கிருர்.

வடகிழக்கே ஐந்து அல்லது ஆருவது கல்லில் 'பெருங் குளம்; இது திருக்குளந்தை எனவும் வழங்கும். இத்தலத்துப் பெருமாள் பெயர் 'மாயக்கூத்தப் பெருமாள்' என்பதாகும்; ஆநந்த நிலைய விமானம். கிழக்குமுகமாக நின்ற திருக்கோல முடைய இப் பெருமாள் வியாழனுக்குப் பிரத்யட்சமானவர். அம்பிகை 'குளந்தைவல்லி.

கிழக்கே இரண்டு கற்றெலைவில் 'இரட்டைத் திருப்பதி'— அதாவது 'திருத்தொலைவல்லி மங்கலம்' அரவிந்தலோசனப் பெருமாள் - கருந்தடங்கண்ணியம்மை; குமுத விமானம். தேவப் பிரான் - புவிமங்கை; வருணவிமானம். இரண்டு பெருமாளும் முறையே இந்திரன் - அஷ்டதிக்குப் பாலகர்க்குக் கிழக்குமுக மாக நின்றும், இருந்தும் அருள் வழங்கியவர்களாவார்கள். பொருநை யாற்றின் வடகரையில் உள்ளது இது.

தென்கரையில் கிழக்கே மூன்ருவது கல்லில் தென் திருப்பதி- தென் திருப்பேரை என வழங்கும் தலத்தில் பத்ர விமானத்தில் 'மகர நெடுங்குழைக்காதப் பெருமாள் (மகர குண்டலத்தர்) கிழக்கு முகமாக விற்றிருக்கும் கோலத்தில் சுக்கிரன், பிரமன் ஆகியோருக்கு அருள் வழங்குகின்ருர். குழைக்காதவல்லி யென்பது அம்பிகை நாமம்.

தென் கிழக்கே இரண்டாவது கல்லில் 'திருக்களூர் - திருக் கோளூர்' என வழங்கும் தலம். இங்கே ஸ்ரீகர விமானத்தில் குபேரனுக்கும் மதுர கவிக்கும் அருள் வழங்கும் கோலத்தில் 'வைத்தமாநிதிப் பெருமாள் கிழக்குமுக புஜங்க சயனராயிருக் கிருர். அம்பாள் பெயர் 'கோளூர்வல்லி.'

ஆக எட்டுத் தலங்களுக்கு நடுநாயகமாக இருக்கிறது இந்தக் காந்தீச்சுரம். இத்தலத்துக்கு 'காந்தை நகர்' என்பது பழமையான பெயராகும்.

கயிலையிலிருந்த காந்தை என்ற முனிவர் இப்பூவுலகம் வருகின்றார்; தீர்த்தங்கள் பல முழ்கித் தலங்கள் பல கண்டு பல மூர்த்திகளை வணங்கி வழிபட்டுப் பொருநைத் துறை வந்து இத் தலத்தை யடைகின்றார். இத் தலம் அவர் மனத்தைக் கவர்ந்த காரணத்தால் இங்கேயே தங்கி பெரும் பூசனை ஆற்றத் துவங்குகின்றார். ஒருநாள், ஒளிப்பிழம்பு அவர் முன் தோன்ற அதை இடைவிடாது அகனமர்ந்த அன்பினராய் வழிபடத்துவங்குகின்றார். உரு ஏறிய அவ்வொளிப் பிழம்பு சிவலிங்கமாகிறது. சுயம் பிரகாசமான அந்த சிவலிங்க வடிவை நாள் தோறும் வணங்கி வரும்போது அவர் மனோபக்குவங்கண்ட சிவபெருமான் அவர்முன்தோன்றி 'வேண்டுவன கேள்' என அருளுகின்றார்.

"பெருமானே! எனது பெயரே உனக்கும், இந்தத் தலத்துக்கும், தீர்த்தத்துக்கும் அருள வேண்டும்" எனக் கேட்கின்றார் காந்தை முனிவர். அவ்விதமே தலத்துக்கும், மூர்த்திக்கும், தீர்த்தத்துக்கும் பெயர் ஆகுமாறு அருளிப் பின் மறைகின்றார் பெருமான்.

அடுத்து ஒரு காரணம் 'காந்தீசுரம்' என்பதற்கு!

ஒன்பதாந் திருமுறையான திருவிசைப்பா பாடியருளிய கருவூர்த் தேவர் பாண்டிய நாட்டிலே பல தலங்களை வழிபட்டுக் கொண்டு இத்தலத்துக்கு வருகின்றார். காந்தைத் தீர்த்தமாடிக் காந்தைலிங்கக் கடவுளை வழிபட்டுக் கொண்டிருக்கும் நாளிலே, ஒரு நாள் கோடிச் சூர்யப் பிரகாசமாய் காந்தைலிங்க மூர்த்தி 'மான் மழுக்கரத்துடன்' காட்சியளிக்கின்றார்.

அந்நிலையில் "காந்தி சொருபியாய் அடியேனுக்குக் காட்சியருளியமையால் உன் பெயரும், இந்தத் தலமும் 'காந்தைலிங்கம், காந்தீசுரம்' என வழங்கி வரவேண்டும்" என வேண்டிக் கொள்ளுகின்றார் கருவூர்த் தேவர்.

கோயிலின் அம்மன் சந்நிதிக்கு வெளிப்பக்கம் (வெளிவீதி தென்கிழக்குப் பக்கம் கருவூர்த் தேவர் மடம் இருக்கிறது. இதில் மூன்று லிங்கங்கள் இருக்கின்றன. போகரிஷி, உண்ணுக் கீசர், கொங்கணர் என்ற மூன்று பேர்கள் இதில் சித்தியடைந்த தாகச் சொல்லுகின்றனர். ஆயின், அதற்கு ஏதுவான வரலாறு தெரியவில்லே. அறம்வளர்த்தநாயகியம்மன் சந்நிதியின் பெரிய கோபுர வாயில் கீழ்புறம் பெரிய மதிலேயொட்டியிருப்பது தரும புரம் மடம்; இதில் விநாயகர் பிரதிட்டை செய்யப்பட்டிருக் கிறது; இம்மடம் உள்ள ஏனைய பிற இடங்களிலும் பிள்ளேயார் இப்படி வைத்திருப்பது வழக்கம். சுவாமி சந்நிதியின் கிழக்கே இருப்பது 'திருஆவடுதுறை மடம். இங்கே நடராஜர்-விநாயகர் இருக்கின்றனர்.

கோயிலின் வடக்குப் பக்கம் இருப்பது தேசிக மூர்த்திகள் கோயில். திருஆவடுதுறை மடத்துக்குப் பெருமையளிக்கும் கோயில் இது.

திருஆவடுதுறை மடத்துத் தம்பிரான் சுவாமிகளில் ஒருவர் தேசிக மூர்த்தித் தம்பிரான் என்பவர். முருகப் பிரானிடம் அளவு கடந்த அன்புடைய இவர் திருச்செந்தூர் பெரிய கோபு ரத்தைக் கட்டி முடித்து அதற்கு வேலே செய்தவர்களுக்குக் கூலியாக விபூதியை வழங்கினுர் என்பது ஓர் சிறப்பு! சிவத் தலங்களுக்கெல்லாம் இத்தலம் சிறந்ததாக – ஏகாந்தமாக எண் ணிக் காந்தீசுவரரை வழிபட்டு முத்தியடைந்தார். ஆண்டு தோறும் மார்கழித் திங்களில் இந்த தேசிக மூர்த்திக்குச் சிறப்பு வழிபாடு – குருபூசை நடத்தி வருகின்றனர் திருவாவடுதுறை ஆதீனத்தார். எப்போதோ ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக இக்கோயில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதை நல்ல நிலேயில் கட்டிச் சீர்படுத்த வேண்டியது அவசிய மாகும்.

'காந்தைலிங்கக் கடவுளுக்கும், அறம் வளர்த்த நாயகி யம்மைக்கும் விமானம் கட்டிவைத்தவர் பாண்டிய அரசமரபினர். இவர்கள் இறைவனுக்கு அபிஷேகம் முதலியன நடைபெற வேண்டிக் குருகூர்க் கோயிலிலிருந்து மான்யம் அளிக்க ஏற்

பாடும் செய்துள்ளனர். மதுரையை அரசாண்டு வந்த நாயக்க அரசராம் திருமலை மன்னன் 'திருமலாபுரம்' என்ற கிராமத்தை வழங்கியுள்ளார். இம் மன்னவனது ஆட்சிக் காலம் கி.பி. 1623–1659 என்பர் ஆராய்ச்சியாளர். செந்திற்பதிபுரக்கும் செவ்வேளின் திருவருள் பெற்றுக் கந்தர்கலிவெண்பா முதலிய பிரபந்தங்கள் பாடியருளிய தெய்வக்கவிஞரும், மதுரை திருமலை நாயக்கமன்னரால் பெரிதும் போற்றிப்புகழப் பெற்ற பெருமையையுடையவரும் ஆகிய குமரகுருபர சுவாமிகள் மரபிலே வந்தவர் அழகிய திருச்சிற்றம்பலக் கவிராயர். இவர் சுவாமி சந்நிதி முன்மண்டபத்தையும் அம்மன் சந்நிதிமுன் மண்டபத்தையும் கட்டிவைத்ததோடு அழகிய தெரு ஒன்றையும் ஏற்படுத்தி இத்தலத்திலேயே 'பட்டர்களை'யும் குடியேற்றிப் பல திருப்பணிகளைச் செய்துள்ளார். கோயில் அர்ச்சகரை (குருக்களை)ப் பாண்டியநாட்டில் 'பட்டர்' என வழங்குவார்கள். சுவாமி சந்நிதிமுன் மண்டபத்தில் கவிராயரது சிலை ஒருதூணில் செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மற்றும்பல அன்பர்களால் திருப்பணி முதலியனசெய்து வைக்கப்பெற்றுள்ளதையெல்லாம் இங்கு விரிப்பின் பெருகும். 1952 ம் ஆண்டு இத்தலத்தைக் கண்டு வணங்கும் வாய்ப்பு அடியேனுக்கு ஏற்பட்டது. அப்போது, ஆலயத்திலுள்ள அலுவலர்களிடம் 1914 ம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தினல் கோயில் பாதிக்கப்பட்ட நிலையைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அவையெல்லாம் தர்மகர்த்தாவாகப் பொறுப்பேற்ற கோட்டைப் பிள்ளைமாரால் நன்கு பாதுகாக்கப் பெற்று நந்தவனம் முதலியன வைத்து நின்று போயிருந்த விழாக்களெல்லாம் நடைபெற்றுவரும் அளவில் இருக்கிறது என்பதை கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். பழமையின் இருப்பிடமான இத்தலத்தை அன்பர்கள் கண்டு வணங்கிப் பேறடைவார்களாகுக.

முற்றும்

அன்பின் உயிர்நிலை

திருமதி. அனந்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் M. A.,
5, Vinayaga Mudali St.
சென்னை – 1.

காதல் என்பது இன்று தோன்றியதல்ல. நேற்று தோன்றியதல்ல. காதல் அடைதல் என்பது உயிருக்கு இயற்கை. பாரைப் படைத்த பரமன், தான் படைத்த உயிர்களின் குருதியில் பாய்ச்சிய தனிப் பண்பு காதல். மனம் நெகிழ்ந்து இன்பப் பெருக்கெடுக்கும் அரிய நிலையை அடையாத உயிரினத்தை இவ்வுலகில் காணமுடியாது. இவ்வற்புதப் பண்பைப்பற்றி தொல்காப்பியரும்,

"எல்லாவுயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வருஉ மேவற்றுகும்"

என்று கூறிச் செல்கிறுர்.

ஆம்! மனிதனுக்கு மட்டும் தனி உரிமையன்று காதல். உயிரில்லாத உடலில்லை. அதுபோலத்தான் காதல் புகாத நெஞ்சமும் இல்லை. அது வெவ்வேறு நெஞ்சங்களுள் புகும்போது வெவ்வேறு உரு எடுத்துச் செல்கிறது. அவ்வளவுதான். பெற்ற தாயிடம் மகள் செலுத்தும் அன்பும், உற்ற சகோதரனிடம் சகோதரி செலுத்தும் அன்பும் ஒன்றுதான். ஆனுல் செலுத்தும் முறைதான் வேறு. பல்வேறு இன்பச் செயல்கள் அன்பின் ஆதிக்கத்தில் தான் நடைபெறுகின்றன. மாலை வந்தவுடன் தென்றல் வருகிறதே, அதை ஏன் முல்லை சிரித்து வரவேற்கிறது? நிலவைக் கண்ட அலைகள் ஏன் தங்கள் எல்லையற்ற மகிழ்ச்சியால் ஆரவாரிக்கின்றன? அருவிகளும் காற்றும் எல்லாம் அன்பின் வழியாகத்தானே நிற்கின்றன?

இம்மெய்யன்பின் தன்மையைப் பழந்தமிழர் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னமேயே நன்கு உணர்ந்திருந் தார்கள். நன்மையும் தீமையும் நிலைத்து வாழும் இவ்வுலகில் எவையுமே தனித்து வாழ முடியாது என்பதை அறிந்திருந்தனர். தெய்வத்தன்மை மிகுந்ததாகக் 'காதலை'ப் போற்றினர். இந்த உண்மைகளை யெல்லாம், அவர்கள் வாழ்க்கைப்படப் பிடிப்பு களான சாவா இலக்கியங்களில் இன்றும் காணலாம்.

தலைவன் தலைவியும் கூடும் காலத்தில் அந்தக் கூட்டம் இறைவனால் கூட்டுவிக்கப் பட்டது என்று நம்பினர் பழம் தமிழர். இறைவன் விதித்த அந்தக் கூட்டத்தை விலக்க யாருமே விரும்பியதில்லை. முன்பின் தெரியாத இருவர் எவ்வாற் ருனே "செம்புலப் பெயல் நீர் போல" அன்பின் எல்லையிலே நின்று இரண்டறக் கலந்து நிற்கிருர்களே, அதுதான் "காதல்" எனப்பட்டது. ஆகையால் தலைவன் இதயத்தில் தலைவி ஒருத் திக்கே இடம். தலைவியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட வனும் அவனே. அவளை வாழவைப்பவனும் அவனே. இந்தக் காதலின் மாட்சியை, அதன் நுணுக்கத்தை வள்ளுவர் கூறு கிருர். தலைவி மிகச் சூடாக எதனையுமே அருந்துவதில்லையாம்! காரணம் என்ன தெரியுமா? அவன் அவள் உள்ளத்தில் இருக் கிருன். அந்த வெப்பத்தில் அவன் துன்பம் அடைந்துவிட் டால்........?

"நெஞ்சத்தார் காதல ராகிவெய் துண்டால்
அஞ்சுதும் வேபாக் கறிந்து"

இது எவ்வளவு பெரிய கற்பனை! மிக உயர்ந்த கற்பனை—போற்று தற்குரிய கற்பனை.

தலைவன் பரத்தைபால் சென்று திரும்பினுன். அதுகண்ட தலைவி மனம் உடைந்து விடுகிருள். மனம் நொந்து அவனிடம், "இந்தப் பிறவியில் நான் உன் தலைவியாக வாழும் பெரும்பேறு அடைந்தேன். ஆனுல் அடுத்த பிறவியில் நீ என் கணவனுக வும், நான் உனக்கு உகந்தவளாகவும் வாழவேண்டும்" என்று வேண்டிக் கொள்கிருள்.

"இம்மை மாறி மறுமை யாகினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே"

இத்தகையவள் ஒருத்தி பன்னூறு ஆண்டுகட்குப் பின் வில்லி புத்தூரில் பிறந்தாள். அவள் மானிடனுக்கு வாழத் துணியாத இறைவனைக் கணவனாகக் கொள்ளும் பெரும் பேறு பெற்றவள். அவள் விரும்பியது "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் நினக்கே ஆட்செய்வேன்" என்பது தான். அந்த விருப்பம்தான் ஒவ் வொரு தமிழ்ப் பெண்ணின் விருப்பமும்.

அன்பின் பெருமையைப் பற்றி பறைசாற்றிக் கொண்டு இருக்கும் என் கண் முன் இரு மாதர்கள் நம் கண் முன் தோன்றுகிறார்கள். அவர்கள் வாழ்க்கையினையும் சமூகத்தின் கண்கொண்டு பார்த்தால், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறு பாடு உள்ளது. ஒருத்தி அரசகுடிக்கு அடுத்த படியாக எண் ணப்படும் உயர்குடியில் தோன்றியவள்; மற்றொருத்தியோ உலகில் ஒதுக்கி ஒரு மூலையில் தள்ளப்பட்ட மிகத் தாழ்ந்தகுடி யில் பிறந்தவள். இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்து ஒருவன் வாழ்க்கையிலே புகுகிறார்கள். தங்கள் கற்பின் வன்மையைக் காட்ட இவர்கள் சமூகக் கட்டுப்பாட்டால் பிரிக்கப்பட்டிருந் தாலும் இருவரிடமும் நிறைந்து நின்ற கற்பின் வளம் அக் கட்டுப்பாட்டைத் தகர்த்துத் தூளாக்கி இருவரையும் ஒரே நிலைக்குக் கொண்டு வந்து விடுகிறது. அவர்கள்தான் கண்ணகியும் மாதவியும்.

கற்புக்கரசி கண்ணகி வள்ளுவர் காட்டும் பெண்மைக்குரிய இலக்கணங்கள் யாவும் பெற்று, பொறுமைக்கே இலக்கணமாய் வாழ்ந்து வந்தாள். காதலர் கருத்தழியச் செயலாற்றினும், தம் கருத்து மாறாத சிறந்த உளப்பாட்டுடன் வாழ்ந்து வந்தாள்.

"அன்புடைக் கணவர் அழிதகச் செய்யினும்
பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை."

என்று பெருங்கதையில் கூறிச் சென்றாரே, அப்பொறையுடன் வாழ்ந்தமையால் தான் தன்னந் தனியாளாய் ஒற்றைச் சிலம்

பைக்கொண்டு ஒரு கோனையே எதிர்த்து நின்று ஒரு மாநாட்டையே அழிக்க முடிந்தது.

> " பெண்ணின் பெருந்தக்க யாவுள; கற்பென்னும்
> திண்மை உண்டாகப் பெறின் "

என்று கூறி மறைந்தாரே வள்ளுவர் அக்கூற்றிற்கு இலக்கணமாக வாழ்ந்தாள். இதன் பலனாக மக்கள் உளக் கோயிலில் அழியா இடம் பெற்றாள் அக்கற்புத் தெய்வம்.

மற்றொருத்தி கற்புக்கரசி மாதவி. ஆம்! அவள் சேற்றில் மலர்ந்த செந்தாமரை. குப்பையில் கிடந்த மாணிக்கம். பெண் உலகிற்கு அழியாப் புகழ் தேடித்தந்த அருந்தவப் பெண். அவள் பிறந்த குலம் என்ன? வாழ்ந்த வாழ்க்கை என்ன? இவற்றை யெல்லாம் எண்ணிப்பார்த்தால் அவள் பெருமை நன்கு விளங்கும். "இன்று ஒருவன் நாளை ஒருவன் என்று பொருளுக்காகத் தன்னையே விற்று வாழ்ந்த கணிகையர் குடியில் பிறந்த ஒருத்தி, தன் காதலுக்காகத் தன்குடியின் ஒழுக்கங்கள் யாவற்றையும் தகர்த் தெரியும் திறன் இருக்குமானால், அக்காதலை விட உயர்காதலும் உண்டோ? குலத்திற்கு ஒவ்வா முறையில் ஒருத்திக் கொருவன் என கோவலுடன் மட்டுமே வாழ்ந்து பின் அவன் மறைந்தவுடன் துறவறம் ஏற்று தன் மகளையும் ஏற்கச் செய்து, ஒருகலைக் குடியையே அழித்து விட்டாளே! அத்தகையத் திண்மை படைத்த மாந்தர் இன்று எத்தனைபேர் உள்ளார்?

"முகிலின்றி நீரில்லை; வானின்றி உலகில்லை அதுபோலத் தான் காதலின்றி வாழ்வில்லை". இது பண்டையோர் கண்ட நெறி. "இவளே நின்னலது இலளே" என்று தோழி, தலைவி தலைவன் இன்றி வாழ இயலாமையைக் கூறுகிறாள். தலைவன் நிலைமையும் இப்படித்தான். தலைவியை மறந்து தலைவன் பிரிந்து விடுகிறான். ஆனால் முடிவில் வந்து சேர்வது மனைவியைத்தான். கோவலன் முடிவில்வந்தடைந்தது கண்ணகியைத்தானே. ஒரு தாய் குழந்தையை அடித்தாலும், பின் தாயைக் கட்டிக்கொண்டு "அம்மா" என்று தானே கதறுகிறது. இப்படிப்பட்ட நிலைமை தான் காதலர் நிலையும்.

"தாயுடன் நலேக்கும் காலேயும் வாய்விட்டு
அன்னுய் என்னும் குழவி போல
இன்ஞ செய்யினும் இனிது தலேயளிப்பினும்
நின் வரைப்பினள் என்தோழி"

என்ற குறுந்தொகைப் பாடல் இந்நிலேயைத்தான் காட்டும்.

ஆக, இத்தகைய அன்பு நிறைந்த வாழ்க்கையின் ஒரு சில காட்சிகளே இங்கு அளித்தேன். இக்காட்சிகள் ஆழ் கடலில் காணும் நித்திலக் குவியலில் ஒரு சில முத்துக்கள். பாற்கடலில் பூனேயை வாழ அனுமதித்தாலும், அதனுல் ஒரு சிறிதளவே உண்டு இருக்க வேண்டியது போலவே, இலக்கியக் கடலில் ஒரு சில காட்சிகளேயே அனுபவித்து அளிக்க முடிந்தது. இக்காட்சிகள் யாவும் பண்டைத் தமிழில் மாட்சிமை பொருந்திய வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டு. காதல் காதல் என்று காம வெறியில் வாழும், சூதும் வாதும் மிக்கு மீகாமனற்ற மரக்கலம்போல சீரழிந்த வாழ்க்கை உடையவர்க்கு வழிகாட்டி.

Aid to Sanskrit Studies at Sri Kanthimathi Ambal Girls' High School, Tirunelveli.

Capital Rs. 20,000

Tirunelveli, the capital city of the later Pandya Kings is one of the Sixteen Siva Kshetras in the Pandya country and it was sung by Tirugnanasambandar. It has been a centre of Sanskrit—Tamil Learning and a famous Sanskrit Tamil Scholar Sri Velliambalavanar, who was a student of St Kumaraguruparar resided at Tirunelveli. It is one of the five Cosmic Dancing Halls of Siva—Tamrasabha. As the paddy, collected for oblation by a Brahmin called Vedasarma, was about to be washed away by floods, it was saved by a fence, created by Lord Siva and hence the city got the name—Tirunelveli. Lord Siva was worshipped at Tirunelveli by Vishnu, Brahma and Agasthya. As the Lord (that was never born) appeared in the Bamboo, He bore the name Veymuthanathar. With a view to foster the growth of Sanskrit and to popularise and encourage the study of Sanskrit at Tirunelveli, this endowment is founded by **His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal.** Head of Sri Kasimutt, Tirupanandal. This endowment shall be styled as **"Endowment for giving aid to Sanskrit Studies at Sri Kanthimathi Ambal Girls' High School, Tirunelveli".**

2. The capital of the endowment is Rs. 20,000 (Rs. Twenty thousand) and it is invested in the following securities :-

State Bank of India, Fixed Deposit Certificate 7%
60 months Date of maturity 31—8—1970.

No. A. 427294 dt. 31—8—65		Rs.	8000-00
Madras 5½% Loan 1977.	MS. 004303	Rs.	5000-00
-do-	MS. 004311	Rs.	5000-00
-do-	MS. 001351	Rs.	1000-00
-do-	MS. 001352	Rs.	1000-00
	Total	Rs.	20000-00

The administration of the fund shall vest in us and our successors in interest.

3. The interest accrued from the endowed capital shall be utilised to pay remuneration to a Sanskrit Pandit appointed in the Kanthimathi Ambal Girls' High School, Tirunelveli under the following conditions :-

a. The Sanskrit Pandit shall possess the required general and professional qualifications prescribed for the post.

b. The Pandit shall teach Sanskrit to pupils studying in the standards 8 to 11 or 6 to 11 according to the syllabus prescribed by Educational Department either outside the school hours or during the school hours as permitted by the Educational Department.

c. The Pandit shall be paid a salary of Rs. 90 (Ninety) per month from the income from endowment and the D. A. if any, shall be met by the management of the High School from their funds.

d. The increments to be given to the Sanskrit Pandit shall also be borne by the Management of the

Girls' High School (under the management of the Swamy Nellaiappar & Sri Kanthimathi Ambal etc. Devasthanams, Tirunelveli).

e. The Sanskrit Pandit shall every month Send a report to us of having satisfactorily done his duties of teaching sanskrit assigned to him in the school through the Headmaster or Correspondent of the said Girls' High School at Tirunelveli. On receipt of the report, the pay of the Pandit will be sent by M. O. every month to the Headmaster or the Correspondent of the School, who shall disburse the amount to the Sanskrit Pandit and send the stamped receipt to us.

f. The Sanskrit Pandit shall be eligible for salary during all the vacations in the School and also be eligible for leave as per M. E. R. or the leave rules framed by the management which is applicable to the other teachers in the School if he had continuously worked for 8 months in the year.

4. If at any time the teacher does not work or takes a long leave without pay, a qualified substitute may be appointed and he shall be paid salary as the permanent incumbent. If a qualified substitute is not available or if the Sanskrit class does not function in the above said School the unspent amount shall be used by us for any other High School imparting education in Sanskrit at our discretion.

5. If the teaching of Sanskrit to pupils in the School is approved and allowed by the Educational Department and if the pay of the Sanskrit Pandit is met by the Educational Department the amount set

apart for this purpose under this endowment may be utilised to award scholarship to deserving girl pupils studying Sanskrit under the terms of this endowment.

6. The endowment shall not be diverted to any purpose other than those mentioned above.

7. The endowed capital shall always stand in our name and our successors in interest. It may be reinvested in highest interest yielding securities as and when necessary.

Note: The endowment has been accepted by the Trust Board of Sri Swamy Nellaiappar & Sri Kanthimathi Ambal etc. Devasthanams, Tirunelveli at the Trust Board meeting held on 13—8—1965 in their resolution No. 16 dated 13—8—1965 communicated in letter Rc. No. 452/64 A 7 dated 14—8—65 from the Executive Officer, Sri Swami Nellaiyappar & Sri Kanthimathi Ambal etc. Devasthanams. Tirunelveli.

Tirupanandal
Dated 4-10-1965 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at the Tiruvidaimarudur Sub Registrar's Office on 7-10-65 as No. 49 of 1965 of Book 4. Volume No. 53 pages 46 to 49.

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்	
10774	சீர்காழித் திருப்பதிகங்கள்	ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகளிடமிருந்து 31-10-63-ல் T. V. S. Lorry மூலம் வரப்பெற்றவை	
10775	சிவபோகசாரம் மூலமும் ஆங்கிலமும் தமிழ்க் குறிப்புரையுடன்	,,	,,
10776	ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்கள் வரலாறு	,,	,,
10777 to 80	ஸ்ரீ பஞ்சாக்ஷர விளக்கம்	,,	,,
10781	ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பிரபந்தங்கள்	,,	,,
10782	மெய்கண்டார் வரலாறு	,,	,,
10783	மெய்கண்ட சாத்திரம்	,,	,,
10784	மெய்கண்ட நூல்கள் உரைநடை	,,	,,
10785	பெரிய புராணம் (மூன்றும் இரண்டாம் பாகம்)	,,	,,
10786	திருத்தொண்டர் புராணம் (மூன்றும் பகுதி, முதற் பாகம்)	,,	,,

10787	பெரியபுராணம்	ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகளிடமிருந்து 31-10-63-ல் T. V. S. Lorry மூலம் வரப்பெற்றவை	
10788	ஏகாதசி புராணம்	,,	,,
10789	சிவப் பிரகாச செந்தமிழ் நூல்கள்	,,	,,
10790	ஸ்ரீமத் கம்ப ராமாயணம் முதல் ஐந்து காண்டங்கள்	,,	,,
10791	ஸ்ரீமத் கம்ப ராமாயணம் உயுத்த காண்டம்	,,	,,
10792	,, ,, சுந்தர காண்டம்	,,	,,
10793	மகாபாரதம் வில்லிப்புத்தூர் ஆழ்வார் இயற்றியது	,,	,,
10794	,, ஸ்ரீ உ. வே. தட்டை V. ஸ்ரீநிவாச சார்யர் மொழிபெயர்ப்பு	,,	,,
10795	ஆதி குமரகுருபர அடிகள் நினைவுத் தமிழ்ப் பரிசுத் தொகுதி	,,	,,
10796 & 97	பண்டார சாத்திரம்	,,	,,
10798	சரபேந்திரர் வைத்திய முறைகள்	,,	,,
10799	கம்பர் நினைவுப் பரிசுத் தொகுதி	,,	,,
10800	கம்பர் கவிதைக் கோவை	,,	,,
10801	கலைக்கூடம் – தஞ்சை	,,	,,
10802 to 804	ஸ்ரீ குமரகுருபர முனிவர் வரலாற்றுப் படங்கள்	,,	,,
10805	திருக்கைலாய ஞானவுலா	,,	,,
10806	திருப்பரன்குன்றம்	,,	,,

10807	ஸ்ரீ காசிக் காண்டம், அதிவீரராம பாண்டியர்	,,	,,
10808	வழுவூர்க் கோயில் வரலாறு	,,	,,
10809	காஞ்சிமா நகரம்	,,	,,
10810 to 12	சிவப்பிரகாசம் மூலமும், ஆங்கில மொழி பெயர்ப்பும்	,,	,,
10813	மூவர் தேவாரத் திரட்டு	,,	,,
10814	கணபதி சுந்தரர் தேவாரத் திரட்டு	,,	,,
10815	அகத்தியர் தேவாரத் திரட்டு	,,	,,
10816 to 818	என் சரித்திரம்	டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்	
10819 & 820	கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள்	,,	,,
10821	உண்மை விளக்கம்	,,	,,
10822 & 823	நீதிநெறி விளக்கம்	,,	,,
10824 & 825	இருபா இருபஃது	,,	,,
10826	காசி யாத்திரை	,,	,,
10827 & 828	திருச்செந்தூர் வள்ளி மணாளன் கோயில் வரலாறு	,,	
10829	ஆலயமணி	R. K. விசுவநாதன்	
10830	சிவஸ்தல மஞ்சரி	,,	
10831 & 832	முதுமொழிமேல் வைப்பு	,,	
10833 to 37	திருத்தொண்டர் திருவந்தாதி	,,	

10838 to 41	வெண்ணிலவில்	R. K. விசுவநாதன்
10842	அப்பர் விருந்து	,,
10843 & 44	பாட்டும் சபதமும் குயில் பாட்டு	,,
10845	விசுவரூபம்	,,
10846	சக்தி	,,
10847	செந்தமிழ் பூம்பொழில்	,,
10848	சைவசித்தாந்த சாத்திரம்	,,
10849	கொங்கு வேளிர் இயற்றிய பெருங்கதை	,,
10850	கலைக்களஞ்சியம்	,,
10851 to 53	பன்னிருதிருமுறை வரலாறு – முதற்பகுதி	,,
10854	Tamil Culture	,,
10855 & 56	SIVANGNANA BOTHAM	,,
10857 & 58	SIVANGNANA SIDDHIAR	,,
10859	An outline of Sivangnana Botham	,,
10860	A garland of Tamil Poetry	,,
10861	The oldest Chidambaram Inscriptions	,,
10862	Madras Finance	,,
10863	A Scheme of crop Insurance for the Province of Madras	,,
10864	Some principal documents relating to Sri Kanchi Kamakodi Peedathipathi Jagathguru	,,

10865	TIRUVARUTPAYAN	,,	
10866 & 67	Siddhanta Trayam	,,	
10868	Mutt and Temples	,,	
10869	The metaphysics of Siva Siddhanta System	,,	
10870	Exhaustive questions & answers. Hindi	,,	
10871	Benediction H. H. Sri la Sri Ambalavana Desikar Swamigal	,,	
10872	Glimpses of the orient	U. G. Nair	
10873 & 74	Tiruchendur Seashore Temple of Subramaniam	,,	
10875	A statistical of the Madras Province	,,	
10876	திருவாசகம்; நீத்தல் விண்ணப்பம்	ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகளிடமிருந்து தபாலில் வரப்பெற்றுக் கொண்டது	
10877	பண்டார சாத்திரம்	,,	,,
10878	Of Human Bondage and Divine Grace	,,	,,
10879	The Twenteeth Century Tamil Dictionary	,,	,,
10880 to 82	திருமழபாடித் தல வரலாறும் தேவாரமும்	மௌனகுரு வழிபாட்டுக் கழகம் திருமழபாடி	
10883	குமரகுருபரன் பத்திரிகை 1963-ம் ஆண்டு (Vol. 14)		
10884 to 86	Sivagnana Botham	Presented by Procter, 27 Alexandre Road, Wellawatte, Colombo.	

10887	மஹாபாரதம், ஸ்ரீ சாந்தா அநுசாஸன, அசுவமேத ஆசிரமவாசமுசல, மகாப்ரத்தானிக, சொர்க்கா ரோஹன பர்வங்கள் (வசன காவியம்)	Presented by Sri A. Subramania Iyer Avl. Retired Engineer P. W. D. Karunkulam
10888	ஸ்ரீ மகாபாரதம், சபா, ஆரண்ய, விராட பர்வங்கள் (வசன காவியம்)	த. சண்முகக் கவிராயர், Presented by A. Subramania Iyer, Retired P. W. D. Engineer, Karunkulam
10889	அகில இந்திய ஆலய வழிகாட்டி	Presented by Ganapathi Library, Kancheepuram
10890	சோமவார விரதம்	தருமையாதீனம்
10891 & 92	ஆனந்தம்	சத்திய ஞானக் கோட்டம், திண்டுக்கல்
10893	தயாபெருஞ்சோதி	,, ,,
10894	பண்டார சாத்திரம்	திருவாவடுதுறை ஆதீனம்
10895	ஸ்ரீ மரகதாம்பாள் சமேத ஸ்ரீ வைத்திய நாதேஸ்வரர் தோத்திரத் திரட்டு	திரு. க. ஏகாம்பரத் தேவர்
10896	Bharathi in English	Bharathi Tamil Sangam, Calcutta
10897	The Tanjore Saraswathy Mahal Library Journal Vol. XVII	T. M. S. M., Tanjore
10898	திருமந்திர மாநாட்டு மலர்	திருவாவடுதுறை ஆதீனம்
10899	திருப்பனந்தாள் பஞ்சாயத்து கூட்டு மன்றம் இரண்டாவது ஆண்டு விழா மலர் 1963	

10900	Swami Vivakananda Centenary Souvenir, 1963	Swami Vivakananda Society (Regd.) Tirunelvely
10901 – 902	மறைமலை யடிகள் வரலாறு	ஆசிரியர். மறை. திருநாவுக்கரசு (தமிழ் பேராசிரியர், வ. உ. சி. தூத்துக்குடி
10903	ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்த சிவக்ஷேத்திர சிவநாமக் கலி வெண்பா	தருமையாதீனம்
10904	திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள், ஆருந் திருமுறை	,,
10905	குரோதி ஆண்டு சுத்தவாக்கிய பஞ்சாங்கம் T. S. குப்புசாமி சாஸ்திரிகள் அவர்களால் கணிக்கப்பட்டது	M. A. சுப்பிரமணிய முதலியார், மனோன்மணி விலாசம் பிரஸ், 49, பாஷ்ய காரலு நாயுடு வீதி, சென்னை
10906	ஸ்ரீ பாஞ்சராத்ரப்ரதிஷ்டா விதி (தமிழ் மொழி பெயர்ப்பு)	ஸ்ரீ பராங்குச பகவத் சாஸ்திர சபா, ஸ்ரீபாஞ்சாத்ர வித்துவான், அர்ச்சகர், வை. பெரிய திருவடி அய்யங்கார், ஸ்ரீவைகுண்டம்.

திருப்பனந்தாள் செந்தமிழ் கல்லூரி "பழந் தமிழ்ப் புலவர் காசி யாத்திரை நிதி"யிலிருந்து
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நூலகத்திற்கு வாங்கிய புத்தகங்கள் :—

10907	உரிமையின் பரிசு? (காந்தி யடிகளின் பிரிவு) (ஓர் அரிய தொகுப்பு நூல்)	திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியீடு
10908	உதயணகுமார காவியம் (செய்யுளும் உரையும்)	பெருமழைப் புலவர் திரு. பொ. வே.
10909	கல்லாடர் இயற்றிய கல்லாடம் (மூலமும் உரையும்)	,, ,, சோமசுந்தரனார்

10910	சட்டவியல் (Jurisprudence)	திரு. மா. சண்முகசுப்பிரமணியம், B. A., B. L.,
10911	தீங்கியல் சட்டம் (Law of Torts)	ஷை
10912	சிவஞானபோத ஆராய்ச்சி	மறைமலையடிகள்
10913	சைவ சித்தாந்த ஞான போதம்	,,
10914	வளையாபதி – குண்டலகேசி	பெருமழைப் புலவர் திரு. பொ. வே. சோமசுந்தரனுர்
10915	The Golden Anthology of ancient Tamil Literature (Vol. I)	Translated by Nalladi R. Balakrishna Mudaliar B. A., L. T.,
10916	,, ,, (Vol. II)	,, ,,
10917	,, ,, (Vol. III)	,, ,,
10918	The cult of Siva or lessons in Sivagnana Botham	V. P. Kandhimathinatha Pillai B. A.,
10919	Book of Meditations for every day in the year	James Allen
10920	தமிழர் சமயம்	தாகூர் சட்ட விரிவுரையாளர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.O.L.,
10921	சமயக் கட்டுரைகள்	பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை
10922	அரசவனத்து அறநிலையம்	திருவாவடுதுறை ஆதீனம்
10923	தமிழ் நூல் வரலாறு	பாலூர் கண்ணப்ப முதலியார்
10924	சிவப்பிரகாசம் (உரைநடையுடன்)	தருமபுர ஆதீனம்
10925	சிவஞான போதம்	,,
10926	சிவஞான சித்தியார் சங்கம் (உரைநடையுடன்)	,,

(தொடரும்)

உ

திருப்பனந்தாள் – ஸ்ரீ காசி மடம்

‘ திருமுறை வெளியீடுகள் ’

		ரூ.	பை.
1	விநாயகர் திருமுறை (அச்சில்) ...		
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ...	3	50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ...	3	00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம் மட்டும் புதிய பதிப்பு) ...	2	75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,, ...	2	00
6*	சுந்தரர் தேவாரம் ,, ...	1	30
7*	திருவாசகம் ,, ...	0	56
8*	திருக்கோவையார்–பேராசிரியர் உரையும் பழைய உரையும் (புதிய பதிப்பு) ...	2	90
9*	ஒன்பதாம் திருமுறை–திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தெளிவுரை ...	1	50
10	,, ,, மூலம் மட்டும் ...	0	56
11*	திருமந்திரம் (புதிய பதிப்பு) ,, ...	2	25
12*	பதினோராந்திருமுறை (புதிய பதிப்பு) ,, ...	1	50
13*	பெரியபுராணம் (மூலம்மட்டும்) ...	3	00
14	பெரியபுராணம் உரை நடை ...	2	00
15	திருத்தொண்டர் புராண சாரம் ...	0	40
16*	அகத்தியர் தேவாரத் திரட்டு ...	0	36
17	திருவிளையாடற் புராணம் மூலம் மட்டும் ...	3	00
18	திருவிளையாடற் புராணம் உரை நடை ...	2	25
19	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) ...	1	75
20	கந்த புராணம் – முதல் மூன்று காண்டங்கள் மூலம் மட்டும் ...	2	75
21	,, யுத்த தேவ காண்டம் ,, ...	2	00
22	,, தக்ஷகாண்டம் ,, ...	1	50
23	கந்தபுராண உரைநடை ,, ...	3	00
24	திருக்குறள்-அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும் ...	1	50
25	திருக்குறள்-பொருட்பால் ,, ...	2	50
26	திருக்குறள் – காமத்துப்பால் ,,		
	ஷை 24, 25, 26. திருக்குறள் 3 புத்தகமும் ...	4	00
27	திருக்குறள் மூலமும் குறிப்புரையும் ...	0	75
28	தாயுமான சுவாமிகள் பாடல் குறிப்புரை ...	1	25
29	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு) ...	0	25
30	திருக்கைலாய ஞானவுலா– உரையுடன் ...	0	50
31	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன் ...	0	25
32	கந்தரநுபூதி மூலம் ...	0	13
33	கந்தரநுபூதி தெளிவுரை ...	0	35
34	கந்தர்கலி வெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புகளுடன் ...	0	37
35	கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும் ...	0	10
36	கந்தர்கலி வெண்பா மூலமும் உரையும் ...	0	37
37	நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும் ஹிந்தியும் ...	0	50
38	சகலகலாவல்லிமாலை ஆங்கிலமும் ஹிந்தியும் [illegible] ...	0	06

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.

Regd. No. M. 5574 குமரகுருபரன்

39	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்) ...	0 75
40	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள் ...	0 37
41	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ...	0 13
42	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக் கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனாட்சியம்மை குறம் ...	2 75
43	திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்	1 25
44	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	1 00
45	பண்டார மும்மணிக் கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1 00
46	சிதம்பரச் செய்யுட்கோவை ...	0 75
47	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ...	0 50
48	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும் ...	0 25
49	திருக்கயிலைத் திருமுறை ...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் ...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை ...	0 15
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் 3-ம் பதிப்பு ...	1 37
53	ஷை ஷை பொருட்பால் 2-ம் பதிப்பு ...	2 75
54	ஷை ஷை காமத்துப்பால் ஷை ...	1 20
55	அபிராமி அந்தாதி-தெளிவுரையுடன் ...	0 50
56	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் (குறிப்புரையுடன்)	(அச்சில்)
57	திருவாரூர்-திருப்பனுவல்கள் ...	0 10
58	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி ...	0 10
59	பழமொழித்திருமுறை ...	0 25
60	திருவாரூர் நான்மணிமாலை ...	0 50
61	Hymns and Proverbs ...	0 30
62	அப்பர்விழா வெளியீடு ...	0 25
63	நவக்கிரகமாண்பு ...	0 25
64	குமரகுருபரர் வரலாறும். அற்புதத்தேவாரத் திரட்டும் ...	0 30

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

"தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோயில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.